

இக்கையேடு,
குழந்தைகளின் நேர்மறையான நடத்தை மற்றும் மனோபாவத்தை வலுவூட்டுகிறது. அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தின் அடிப்படை மதிப்பீடுகள்

- பாகுபடுத்தாமை (Non-discrimination)
- மாண்பு (Dignity)
- சமத்துவம் (Equality)
- ஒத்துழைப்பு (Co-operation)
- மரியாதை (Respect)
- நியாயமாக நடத்தல் (Fairness)
- அனைவரையும் உள்ளடக்கல் (Inclusion)
- பன்முகத் தன்மையை மதித்தல் (Respect for diversity)
- பொறுப்பேற்றல் (Responsibility)
- ஏற்புடைமை (Acceptance)

மனித உரிமைக் கல்வி நிறுவனம்
6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம், மதுரை -625002. தமிழ்நாடு
Ph:91-452-2539520 Fax: 91-452-2531874
E-Mail:ihre@pwtn.org Website: www.ihre.in / www.peopleswatch.org

HOPE

HRC

# மனித உரிமை மன்றம்

## Human Rights Club

# விளையாட்டு வழி மனித உரிமைக் கல்வி

## (Human Rights Education through Games)



"மனித உரிமைகளைக் கலாச்சாரமாக வளர்த்தெடுப்போம்"

மனித உரிமைக் கல்வி நிறுவனம்
ஹோப் நிறுவனம்

# மனித உரிமை மாணவர் மன்றம்
(Human Rights Club-HRC)

"மனித உரிமைகளைக் கலாச்சாரமாக வளர்த்தெடுப்போம்"

# விளையாட்டு வழி மனித உரிமைக் கல்வி
## (Human Rights Education through Games)

மாணவர் மன்றத்தின் பெயர்..............................................................

மன்றத்தின் எண் & மன்றம் துவக்கப்பட்ட நாள்....................................

பள்ளியின் பெயர்.........................................................................

ஊர்.........................................................................................

நகராட்சி/கொம்யூன்.........................................................................

equitas


**மனித உரிமைக் கல்வி நிறுவனம்**
6. வல்லபாய்சாலை, சொக்கிகுளம்,
மதுரை-625 002.
தொலைபேசி: 0452- 2539520
தொலைநகலி: 0452 - 2531874
மின்னஞ்சல்: ihre@pwtn.org
இணையதளம்: www.ihre.in

**ஹோப் நிறுவனம்**
106, எம்.ஜி.ஆர் நகர்,
100 அடி சாலை,
புதுச்சேரி - 605 004.
தொலைபேசி: 0413-2266741
மின்னஞ்சல்: hopeindia2015@gmail.com
இணையதளம்: www.vrhope.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **விளையாட்டு வழி மனித உரிமைக் கல்வி...**<br>(Human Rights Education through Games) |
| நூலாக்கம் | : | ல. பெர்னாட் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு–டிசம்பர் 2015 |
| வடிவமைப்பு | : | M. ஜெயக்குமார் & V.சத்யா |
| மூலம் | : | **Play it Fair,** Human Rights Education Tookit for Children, Equitas-International Centre for Human Rights Education, Canada |
| வெளியீடு | : | மனித உரிமைக் கல்வி நிறுவனம்,<br>6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம்,<br>மதுரை–625 002 |
| தொலைபேசி | : | 0452–2539520 |
| தொலைநகலி | : | 0452–2531874 |
| மின்னஞ்சல் | : | ihre@pwtn.org |
| இணையதளம் | : | www.ihre.in |
| அச்சாக்கம் | : | ஆன்டோ ஆர்ட் கிராப்ட்ஸ், சிவகாசி |


(மனித உரிமை மாணவர் மன்ற குழந்தைகள் மனித உரிமைகளை விளையாட்டுகள் மூலம் எளிய முறையில் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் இக்கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. இக்கையேடு சர்வதேச அளவில் மனித உரிமைக் கல்விக்கான பயிற்சியை திறம்பட அளித்து வரும் இக்விடாஸ் அமைப்பின் குழந்தைகளுக்கான விளையாட்டு வழி மனித உரிமைக் கல்வி கையேட்டிலிருந்து தொகுக்கப்பெற்றுள்ளது.)



# முன்னுரை

பள்ளிகளில் உயர்நிலை வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களின் தற்போதைய நிலை குறித்து ஆசிரியர்கள், பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் அரசு சாரா பள்ளி நிர்வாகிகள், பெற்றோர்கள்,தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஊடகங்கள் மற்றும் இதர பிரிவினர் ஒரே மாதிரியான கவலை கொண்டுள்ளனர். அவர்கள் கவலை கொண்டிருப்பது, பள்ளிகளில் குழந்தைகளின் சரிவு நிலை பள்ளிகள் சம்பந்தப்பட்ட அனைத்து விசயங்களிலும் மாணவர்களிடையே காணப்படும் பொதுவான ஆர்வமின்மை, அவர்களின் சுய அடையாளங்களை காத்துக் கொள்ளுவதில் வளர்ந்து வரும் ஆர்வம், வகுப்பறையிலும் பொது இடங்களிலும் பொதுவாக அவர்களிடையே காணப்படும் முரட்டுத்தனமான நடவடிக்கைகள், வயது மூத்தவர்களிடத்தும், ஆசிரியர்களிடத்தும் அவர்கள் காட்டும் ‘‘அவமரியாதை’’ இது போன்று நீங்கள் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். பல்வேறு நிலைகளில் இந்த பிரச்சனைகளுக்கு சொல்லப்படும். ஓரே தீர்வு ‘‘ஒழுக்கம்’’. இந்தத் தீர்வை கூறும் எல்லோரும் மறந்து விட்ட ஒரு விசயம் குழந்தை உரிமைகள். ‘‘உரிமைகள் கொண்ட’’அவர்களுக்கு அவர்கள் உரிமைகள் பல மறுக்கப்படுகின்றன. பள்ளிகளிலோ அல்லது வெளியிலோ அவர்களுக்கு அவ்வுரிமைகள் அறிமுகம் செய்யப்படுவதில்லை. அவர்களின் பெற்றோரும் கூட கூறுவதில்லை. தமக்கு உரிமைகள் உண்டு என்று குழந்தைகள் அறிந்திருந்தனர் என்றால் மேற்குறிப்பிட்ட நிலைமை சிறிது சிறிதாக மாறியிருக்கும்.

ஹோப் நிறுவனம் புதுச்சேரி பள்ளிகளிலும், விடுதிகளிலும், கிராம அளவிலும் மனித உரிமை மன்றங்கள் அமைக்க முன் வந்துள்ளது. இது, குழந்தைகள் தமது உரிமைகள் குறித்து அறிந்து கொள்ளவும் இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் பிரிவுகள் 3,4 மற்றும் 4ஏ ல் உள்ள ஒரு குடிமகனின் பொறுப்புகள் என்ன என்பதை அறிந்து கொள்ளவும் உதவும். இந்த மனித உரிமை மன்றங்கள் இந்நாட்டின்

இளையகுடிமகன்களைக் கொண்ட ஒரு புதிய தலைமுறையை உருவாக்கும். அவர்கள் ஜனநாயகத்தின் துடிப்புள்ள மற்றும் அர்த்தமுள்ளவர்களாக தம்மை ஆக்கி கொள்ளவும் மற்றும் சமுதாயத்தில் மற்றவர்களை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டோர்களாக மாற்றவும் உதவும். மனித உரிமை மன்றங்களின் உறுப்பினர்களுக்கு மனித உரிமைக் கல்வி குறித்து உருவாக்கப்பட்ட உபகரணங்கள், இளைய குடிமக்களான புதியதலைமுறைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. EQUITAS மனித உரிமைகளுக்கான சர்வதேச மையம் மான்ட்ரியல்,கனடாவிற்கு சொந்தமான "அழகாக விளையாடுங்கள்" என்ற மனித உரிமைக் கல்வி உபகரணத்தை (மனித உரிமை கல்வி நிறுவனம் -IHRE) மாற்றங்களுடன். உபயோகப்படுத்திக்கொள்ள அனுமதி அளித்தமைக்கு (விளையாட்டு தொடர்கள்) தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது. இந்த உபகரணம் மாணவர்களிடையே மனித உரிமைகள் மதிப்பீடுகளை ஊக்குவிக்கவும், அவற்றை பாதுகாக்கவும் மற்றும் தலையீடு செய்யவும் உதவும்.

இந்த மனித உரிமைக் கல்வி உபகரணத்தை பள்ளிகளில் மனித உரிமை மன்றங்களில் உபயோகப்படுத்தும் வகையில் உருவாக்குவதற்கு பெருமளவு பணிபுரிந்த சர்வதேச மனித உரிமை மையம், மாண்ட்ரியல், கனடாவின் முன்னாள் மாணவரும் எமது மனித உரிமைக் கல்வி நிறுவனத்தின் தமிழக ஒருங்கிணைப்பாளருமான திரு.பெர்னாட் அவர்களை பாராட்டுகிறேன். நமது பள்ளிகள் அனைத்திலும் மனித உரிமைக் கல்வி பிரகடனம் 2011 மற்றும் ஐ.நாவின் பள்ளிக்குழந்தைகள் மத்தியில் மனித உரிமைக் கல்வித்திட்டம் ஆகியவற்றை நாம் நடைமுறைப்படுத்த வேண்டிய நேரம் இது.

வழக்கறிஞர் ஹென்றி திபேன்
நிர்வாக இயக்குநர்
மனித உரிமைக் கல்வி நிறுவனம்

தேதி : 08.12.2015
இடம் : மதுரை

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | நோக்கம் | 01 |
| 2. | மனித உரிமைகள்-Human Rights | 02-03 |
| 3. | அகில உலக மனித உரிமைப் பிரகடனம்-1948 (சுருக்கமாக) | 04-05 |
| 4. | குழந்தை உரிமைகள் | 06-07 |
| 5. | மனித உரிமைக் கல்வி | 08-09 |
| 6. | பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை | 10-12 |
| 7. | இக்கையேடு வளர்க்கும் அடிப்படையான மதிப்பீடுகள் | 13-16 |
| 8. | மனித உரிமை மன்றம் மற்றும் குழுவிற்கான நடத்தை விதிகள் உருவாக்கம் | 17-20 |
| | மனித உரிமை விளையாட்டுகள் | |
| 9. | எங்கள் வழி ஒதுக்கல் | 21-23 |
| 10. | மேகத்திற்குள் விமானம் (நம்பிக்கை ஒளி) | 24-26 |
| 11. | ஆக்டோபஸ் | 27-29 |
| 12. | முதலையும் தவளையும் | 30-32 |
| 13. | பலூன் | 33-34 |
| 14. | புயல் ஓசை... | 35-38 |
| 15. | பூனை | 39-41 |
| 16. | வரிசையில் போவோம்...வாங்க | 42-44 |
| 17. | ஒதுக்கலும் உள்ளடக்கலும் | 45-47 |
| 18. | உலகிலேயே சத்தமான விளையாட்டு | 48-50 |
| 19. | ஹாலோ ஹாலோ... | 51-53 |
| 20. | அணிலும் நரியும் | 54-56 |
| 21. | கதை சொல்ல வாரோம்மாங்க... | 57-59 |
| 22. | மனித முடிச்சுகள் | 60-61 |
| 23. | டாம் + ஜெரி (எலி பூனை விளையாட்டு) | 62-63 |
| 24. | கொஞ்சம் சிரிங்க குழந்தைகளே... | 64-65 |
| 25. | உள்ளே வெளியே... | 66-67 |
| 26. | புயல் வருது ஓடிப் போங்க... | 68-69 |
| 27. | திசை தேடும் பறவைகள் | 70-72 |
| 28. | டிங் டாங்... இப்ப நேரம் என்ன... | 73-75 |

# விளையாட்டு வழி மனித உரிமைக் கல்வி

## 01. நோக்கம்

மனித உரிமைக் கல்வி மாணவர் மன்ற குழந்தைகளிடம் **மனித உரிமைகள், பாகுபடுத்தாமை, அமைதி முறையில் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது** போன்றவற்றை வளர்த்தெடுக்கவே இக்கையேடு. பல்வேறுபட்ட செயல்பாடுகள் மூலம் மனித உரிமை மதிப்பீடுகளை குழந்தைகளின் நடத்தை மற்றும் மனோபாவத்தில் தாக்கத்தை ஏற்படுத்துதல்.

இக்கையேடு, குழந்தைகளின் நேர்மறையான நடத்தைகளை வலுவூட்டுகிறது. அதிலும் குறிப்பாக அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தின் அடிப்படை மதிப்பீடுகளான **பாகுபடுத்தாமை, மாண்பு மற்றும் சமத்துவத்தை** அடிப்படையாகக் கொண்டது. அவை

- ஒத்துழைப்பு- Cooperation
- மரியாதை- Respect
- நியாயமாக நடத்தல்-Fairness
- அனைவரையும் உள்ளடக்கல்-Inclusion
- பன்முகத் தன்மையை மதித்தல்-Respect for diversity
- பொறுப்பேற்பு-Reponsibility
- ஏற்புடைமை-Acceptance

# 02.மனித உரிமை–Human Rights



## மனித உரிமைகள் என்றால் என்ன?

மனித உரிமைகள் என்பன, மனிதர்களாக பிறந்த ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமைகளாகும். ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போதே சமத்துவம், மாண்பு மற்றும் உரிமைகளுடன் பிறக்கிறான். மனித உரிமைகள் அனைத்தும் அனைவருக்கும் சமமானது. யாருக்கும் எந்த சூழலிலும் எடுக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது.

ஒவ்வொரு மனிதனுக்கும் மனித உரிமைகள் முக்கியமானது. ஏனெனில் மாண்புடன் வாழ்வதற்கான உரிமையை உத்தரவாதப்படுத்துகிறது. அவை உயிர் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்பையும் உள்ளடக்கியதாக உள்ளது. மாண்புடன் வாழ்வதற்கான உரிமை என்பது மரியாதையான, பாதுகாப்பான குடியிருப்பு, போதுமான உணவைப் பெறுவது, கல்வியைப் பெறுதல், தொழில் செய்தல், விரும்பிய மதத்தை பின்பற்றுதல், தாய் மொழியை பின்பற்றல் மற்றும் அமைதியாக வாழ்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

- மனித உரிமைகள், மக்களை வன்முறைகளிலிருந்து பாதுகாக்கிறது.
- மனித உரிமைகள், மக்களிடையே பரஸ்பர மரியாதையை வளர்க்கிறது.
- மனித உரிமைகள், பிறரின் உரிமைகளை மீறாமல் பாதுகாக்கிறது.

## மனித மாண்பு என்றால் என்ன?

மனித மாண்பு என்பது அடிப்படை மனித உரிமைக் கோட்பாடாகும். மனிதர்கள் அனைவரும் மரியாதைக்குரியவர்கள். ஏனெனில் அவர்கள் மனிதர்கள். மனிதர்களின் வயது, பாலினம், கலாச்சாரம், மதம், பிறப்பிடம், நிறம், இனம், மொழி, இயலாமை, திறன், சமூக அந்தஸ்து, அரசியல் நிலைப்பாடு என எதுவாக இருந்தாலும் சமமாக மதிக்கப்படக் கூடியவர்களே.

## சமத்துவம் என்றால் என்ன?

சமத்துவம் என்பது மற்றொரு அடிப்படை மனித உரிமைக் கோட்பாடாகும். இதன்படி அனைத்து மனிதர்களும் சுதந்திரமாக, சமத்துவத்துடன் பிறக்கின்றனர். அனைத்து தனிநபர்களுக்கும் அனைத்து உரிமைகளும் சமமானது. அனைத்து மனிதர்களும் சமமாக மதிக்கப்படக் கூடியவர்களே. பாகுபடுத்தாமை என்பது சமத்துவத்தின் ஒருங்கிணைந்த கூறாகும். எவர் ஒருவருக்கும் வயது, பாலினம், கலாச்சாரம், ஜாதி, மதம், பிறப்பிடம், நிறம், இனம், மொழி, இயலாமை, திறன், சமூக அந்தஸ்து, அரசியல் நிலைப்பாடு என எந்த நிலையிலும் உரிமைகள் மறுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது.

## 03.அகில உலக மனித உரிமைப் பிரகடனம்-1948 (சுருக்கமாக)

| | | |
|---|---|---|
| பிரிவு | 1. | சமத்துவத்திற்கான உரிமை |
| பிரிவு | 2. | பாகுபாட்டிலிருந்து விடுதலை |
| பிரிவு | 3. | உயிர் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம், தனிநபர் பாதுகாப்பு |
| பிரிவு | 4. | அடிமை முறையிலிருந்து விடுதலை |
| பிரிவு | 5. | சித்ரவதை மற்றும் மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தப்படுவதிலிருந்து விடுதலை |
| பிரிவு | 6. | சட்டத்தால் ஒரு நபராக அங்கீகரிப்பதற்கான உரிமை |
| பிரிவு | 7. | சட்டத்தின் முன் அனைவரும் சமம் |
| பிரிவு | 8. | உரிய நீதிமன்றங்கள்மூலம் தீர்வு காண்பதற்கான உரிமை |
| பிரிவு | 9. | முறையற்ற கைது மற்றும் சிறை வைக்கப்படுவதற்கு எதிரான உரிமை |
| பிரிவு | 10. | நியாயமான விசாரணைக்கான உரிமை |
| பிரிவு | 11. | குற்றவாளி என்று நிருபிக்கப்படும் வரை குற்றமற்றவராகவே நடத்தப்படல் வேண்டும் |
| பிரிவு | 12. | தனிநபர், குடும்பம், வீடு மற்றும் தொடர்பில் அந்தரங்க உரிமை |
| பிரிவு | 13. | நாட்டிற்குள், நாடுகளுக்கிடையே சுதந்திரமாக நடமாட (இடம்பெயர) உரிமை |
| பிரிவு | 14. | கொடூர போர் சூழல்களின் போது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அகதியாக தஞ்சம் கோருவதற்கான உரிமை. |
| பிரிவு | 15. | ஒருவர் தனக்கு தாய்நாடாக கொள்வதற்கான உரிமை மற்றும் தாய்நாட்டை மாற்றிக் கொள்வதற்கான உரிமை |

| | | |
|---|---|---|
| பிரிவு | 16. | திருமணம் செய்துக் கொள்ள மற்றும் தனக்கான குடும்பத்தை அமைத்துக் கொள்வதற்கான உரிமை |
| பிரிவு | 17. | சொந்தமாக சொத்து வைத்துக் கொள்வதற்கான உரிமை |
| பிரிவு | 18. | நம்பிக்கை மற்றும் மதத்திற்கான சுதந்திரம் |
| பிரிவு | 19. | சொந்தமாக கருத்துக்களை வைத்துக் கொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்குமான உரிமை |
| பிரிவு | 20. | அமைதியான முறையில் கூடுவதற்கான உரிமை |
| பிரிவு | 21. | அரசில் பங்கேற்பு மற்றம் சுதந்திரமான தேர்தலுக்கான உரிமை |
| பிரிவு | 22. | சமூக பாதுகாப்பிற்கான உரிமை |
| பிரிவு | 23. | கௌரமான பணிச் சூழல் மற்றும் சங்கமாக சேருவதற்கான உரிமை |
| பிரிவு | 24. | ஓய்விற்கான உரிமை |
| பிரிவு | 25. | போதுமான வாழ்க்கைத் தரத்திற்கான உரிமை |
| பிரிவு | 26. | கல்விக்கான உரிமை |
| பிரிவு | 27. | சமூக வாழ்க்கை மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் பங்கு பெறுவதற்கான உரிமை |
| பிரிவு | 28. | மனித உரிமைகளை உறுதிச் செய்யும் சமூக ஒழுங்கிற்கான உரிமை |
| பிரிவு | 29. | சமூகக் கடமை என்பது, சுதந்திரமான, முழுமையான வளர்ச்சியை அடிப்படையாக கொண்டது |
| பிரிவு | 30. | மனித உரிமைகளை பாதிக்கும் வண்ணம் அரசோ அல்லது தனி நபர்களோ ஈடுபடக் கூடாது. |

# 04.குழந்தை உரிமைகள்



## குழந்தை உரிமைகள்

18 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளின் உரிமைகளையும் பாதுகாத்தல்,

அய்க்கிய நாட்டவையின் மனித உரிமைகளுக்கான பிரகடனத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளும் மனிதர்களாக பிறந்த அனைவருக்கும் பொதுவானதாகும். அதிலும் குழந்தைகளுக்கான உரிமைகள் என்பது அவர்களின் விளிப்பு நிலையை கவனத்தில் கொண்டு அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் வகையில் சிறப்பு உரிமைகள் குழந்தை உரிமைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன.

குழந்தை உரிமைகளின் நோக்கம், ஒவ்வொரு குழந்தையும் முழுமையான குழந்தைத் தன்மையை அனுபவிக்கும் வகையில் முழுமையாக வளர்வதையும் உறுதி செய்தலாகும். குழந்தைகள் அனைவரும் எவ்வகையான பாகுபாட்டிற்கும் ஆட்படாமல் பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை மற்றும் கல்வி, நலம், வளர்வதற்கான சூழல் ஆகியன பெறுவதற்கான உரிமை, சமூக நிகழ்வுகளில் பங்கு பெறுவதற்கான உரிமைகளை உள்ளடக்கியதாக உள்ளன.

வன்முறைகள் மற்றும் தவறாக நடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான கருவியாக குழந்தை உரிமைகள் உள்ளன. மக்களிடையே குழந்தை உரிமைகள் பரஸ்பர மரியாதையை உருவாக்குகின்றன. குழந்தைகள் தங்களுக்குள்ளும், மக்கள் குழந்தைகள் உரிமைகளை மதிப்பதன் மூலமும் முழுமையாக இலக்கை அடைய முடியும். அனைத்து மக்களுக்கும் அனைத்து உரிமைகளும் உள்ளன என்று அங்கீகரித்தல் மற்றும் நடத்தை மற்றும் மனோபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் மரியாதை மற்றும் அனைவரையும் உள்ளடக்கல் மற்றும் ஏற்புத்தன்மையை உருவாக்கல்.

## குழந்தை உரிமைகளுக்கான அடிப்படையான கோட்பாடுகள்

(அய்க்கிய நாட்டவையின் குழந்தைகள் உரிமைகளுக்கான உடன்படிக்கை-1989)

1. பாகுபடுத்தாமை மற்றும் சமமான வாய்ப்புகள்
2. குழந்தைகளின் அதிகபட்ச நலன்
3. வளர்ச்சி மற்றும் வாழ்வதற்கான உரிமைகள்
4. பங்கேற்பிற்கான உரிமைகள்

காண்க-அய்க்கிய நாட்டவையின் குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கை-1989 கையேடு.

# 05.மனித உரிமைக் கல்வி



## மனித உரிமைக் கல்வி என்றால் என்ன?

மனித உரிமைக் கல்வி கற்போரிடம் அறிவு, ஆற்றல், நடத்தை மற்றும் மனோபாவத்தில் மனித உரிமைச் சார்ந்த மாற்றத்தை ஏற்படுத்துதல் ஆகும். மனித உரிமைக் கல்வி மக்களிடம் மனித உரிமைச் சார்ந்த மதிப்பீடுகளை வளர்க்கும் கருவியாக உள்ளது. அன்றாட வாழ்க்கையில் அனைவரையும் மதித்தல், ஏற்றுக் கொள்ளுதல், உள்ளடக்குதல் போன்ற மதிப்பீடுகளை வளர்க்கும் கல்வியாக உள்ளது.

மனித உரிமைக் கல்வி பிறருடனான உறவை வலுப்படுத்துவதற்கான கருவியாக உள்ளது. மனித உரிமைக் கல்வி தன்னுடைய நடத்தை மற்றும் மனோபாவத்தை விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் பார்வையை கொடுக்கிறது. மேலும் அமைதி, சமூக நல்லிணக்கம், அனைவரின் உரிமைகளையும் மதிக்கும் பக்குவத்தை ஏற்படுத்துகிறது.

## மனித உரிமைக் கல்வியை ஏன் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்?

1. ஏனெனில் இது அவர்களுடைய உரிமைகள். குழந்தைகளும் மனிதர்களே.
2. மனித உரிமையின்பால் மரியாதையை அதிகரிக்க செய்யவதற்காக.
3. ஏனெனில் மனித உரிமை மதிப்பீடுகள் அனைவருக்கும் பொதுவானதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
4. குழந்தைகளின் சுயமரியாதையை வளர்ப்பதோடு துடிப்பாக பங்கேற்பினை உறுதி செய்தல்.
5. நேர்மறையான நடத்தைகளை வலுவூட்டல்.

# 06. பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை



## பாகுபாடு என்றால் என்ன?

ஒரு குழுவை அல்லது தனிநபரை ஒதுக்கும் அல்லது மறுக்கும் செயலை பாகுபாடு என்கிறோம். உதாரணத்தற்கு வேலையில், வீட்டு வாடகை, பொது இடத்தை பயன்படுத்துதல் போன்றவைகளில் ஒதுக்குதல் அல்லது மறுத்தல் போன்றவைகளே பாகுபாடு எனப்படுகிறது.

வயது, பாலினம், கலாச்சாரம், மதம், பிறப்பிடம், நிறம், சாதி, வர்க்கம், இனம், மொழி, இயலாமை, திறன், சமூக அந்தஸ்து, அரசியல் நிலைப்பாடு என எதன் அடிப்படையிலும் ஒரு குழுவை அல்லது ஒரு நபரை மற்றொரு குழு அல்லது மற்றொரு தனிநபர் ஒதுக்குவது அல்லது தனிமைப்படுத்துவது, தரக்குறைவாக நடத்துவது பாகுபாடாகும்.

## பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை என்றால் என்ன?

பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை என்பது அனைத்து மனிதர்களும் சமமாக நடத்தப்படுவதற்கான உரிமையாகும். ஒவ்வொரு மனிதனும் அடிப்படை உரிமைகளை அனுபவிக்க உரிமை உண்டு. அவ்வடிப்படை உரிமைகள் வயது, பாலினம், கலாச்சாரம்,

மதம், பிறப்பிடம், நிறம், சாதி, வர்க்கம், இனம், மொழி, இயலாமை, திறன், சமூக அந்தஸ்து, அரசியல் நிலைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப் பெறல் கூடாது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும் அடிப்படை உரிமைகளில் பாகுபாடு காட்டாமை மற்றும் சமத்துவ உரிமைகளை அங்கீகரித்துள்ளது. பாகுபாடு என்பது சட்டத்திற்கு எதிரானதாகும்.

அய்க்கிய நாட்டவையின் குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கை, பிரிவு-02 இன்படி பாகுபாடு காட்டாமை மற்றும் சமத்துவ உரிமைகள் அனைத்துக் குழந்தைகளுக்கும் உரியது. குழந்தைகள் எங்கிருந்து வருகிறார்கள், அவர்களின் பெற்றோர், என்ன மொழி பேசுகிறார்கள், எந்த மதத்தை பின்பற்றுகிறார்கள், அவர்கள் ஆணா, பெண்ணா, அவர்களின் கலாச்சாரம், அவர்கள் மாற்று திறனாளி, அவர்கள் ஏழை, பணக்காரன் என எதன் அடிப்படையிலும் ஒரு குழந்தையை நியாயமற்ற முறையில் நடத்துவது பாகுபாடாகும்.

## மாணவர் மன்றத்தின் மூலம் பாகுபாடு காட்டாமையை எவ்வாறு வளர்த்தெடுப்பது?

kÅ jc Çi k k‹ w§ fŸ g‹ K f த் தன்மையை மதித்தல் மற்றும் அனைவரையும் ஏற்றுக் கொள்ளல் ஆகிய மதிப்பீடுகளை குழந்தைகளிடம் வளர்த்து அவர்களின் நடத்தை மற்றும் மனோபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதே முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் பாகுபாட்டை உறுதியாக தடுக்க முடியும்.

## குழந்தைகளை அதிகாரப்படுத்தல்

குழந்தைகளும் இளைஞர்களும் பாகுபாட்டுடன் ஒவ்வொரு நாளும் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொருவரிடமும் ஊடகங்களும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் பாதிப்பிலிருந்து மீளாத நிலை அல்லது பாகுபாட்டுடனான கேளிக்கை

வார்த்தைகள், தொடர்கள் போன்றவை பாகுபாட்டு உணர்வுகளை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள காரணமாக அமைகின்றன. பாகுபாடு குறித்த விழிப்புணர்வை மட்டும் ஏற்படுத்தினால் போதாது மாறாக குழந்தைகளை அதிகாரப்படுத்துதல் மற்றும் பாகுபாடுகளை திறம்பட எதிர்கொள்வதற்கான திறன்களையும் அளிப்பது அவசியமாகும்.

இக்கையேட்டின் மூலம் அனைத்துக் குழந்தைளும் பாகுபாடு குறித்த உணர்வைப் பல்வேறு வகைகளில் பெறுவார்கள். குறிப்பாக ஒதுக்குதல் மற்றும் உள்ளடக்குதல், வன்முறைகள் மற்றும் பாகுபாட்டு உணர்வுகளை கொண்ட வார்த்தைகள், போட்டிகள், ஒத்துழைப்புகள் போன்ற உணர்வுகளை தெரிந்து கொள்வார்கள். குழந்தைகள் ஏன் பாகுபாடு காட்டக் கூடாது என்பதை பற்றியும் பன்முகத் தன்மையை மதித்தல், அனைவரையும் உள்ளடக்குதல், ஏற்புடைமை போன்ற நேர்மறையான மதிப்பீடுகளை வளர்த்தெடுப்பதன் மூலம் பாகுபாட்டை ஒழிக்க கற்றுக் கொள்வார்கள்.

## 07. இக்கையேடு வளர்க்கும் அடிப்படையான மதிப்பீடுகள்

**ஒத்துழைப்பு-Cooperation**

பொதுவான நோக்கத்தை அடையும் வகையில் ஒன்றிணைந்து செயல்படுவது. (உதா…நம்முடைய கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுதல், நம்முடைய திறமைகளை குழுவின் இலக்கை அடைய பயன்படுத்துவது)

**மரியாதை-Respect**

அனைவரையும் மதித்தல் மற்றும் மாண்புடன் நடத்துதல் இதன் அடிப்படையாகும். (உதா…அனைவரையும் மாண்புடன் நடத்துதல் என்பது அவர்களை சரியான பெயரை உச்சரித்து அழைத்தல் மாறாக அவர்களை இழிவுப்படுத்தும் வகையில் பேசுதல் கூடாது)

**நியாயமாக நடத்தல்-Fairness**

அனைவருக்கும் சமமான முக்கியத்துவத்தை அளித்தல், அனைவருக்கும் சமமான உரிமைகள் உள்ளன என்பதை உணர்தல் மற்றும் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை அளித்தல்.(உதா…ஆண் பெண், சாதி என எதன் அடிப்படையிலும் பாகுபாடு பார்க்காமல் அனைவருக்கும் சமமான வாய்ப்பு அளித்தல்)

**அனைவரையும் உள்ளடக்கல்-Inclusion**

ஒவ்வொருவரும் சமூகத்தின் ஓர் அங்கம், குழுவில் ஓர் அங்கம் என்பதை அங்கீகரித்தல். (உதா…அனைத்துக் குழந்தைகளும் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்பதற்கான உரிமை உண்டு. அவை இயலாமை, மொழி என எதன் அடிப்படையிலும் மறுத்தல் கூடாது.)

**பன்முகத் தன்மையை மதித்தல்**-Respect for diversity

தனிநபர் வேறுபாடுகளை மதித்தல் மற்றும் அங்கீகரித்தல் (உதா...நாம் அனைவரும் வேறுபட்டவர்கள் ஆனால் ஒரே சமூகத்தில், குழுவில்தான் உள்ளோம் என்ற உணர்வு அவசியம். நாம் நேரடி பங்கேற்கும் முறையில், உணவு முறை, வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், உடை உடுத்தும் முறை, பேசுதல் மற்றும் சிந்தித்தல் என எதுவாக இருந்தாலும் மதிக்கப்பெறுதல் வேண்டும்.

**பொறுப்பேற்பு**-Reponsibility

ஒரு செயலை செய்யும் போதும் அல்லது செய்யாமல் இருக்கும் போதும் அல்லது செய்வதற்கு முன்பும் அதனால் ஏற்படும் விளைவுகளை சிந்தித்து பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளல்.(உதா...குழு அல்லது மன்றத்தின் நேர்மறையான செயல்பாடுகளுக்கு உத்வேகத்துடன் பங்களிப்பது.)

**ஏற்புடைமை**-Acceptance

அனைவரின் முழுமையான பங்கேற்பை உறுதி செய்வது. யாரும் எத்தகைய விலக்கும் இன்றி அனைவரும் சமமான பங்கேற்பை பெறுதல். (உதா...அனைத்துக் குழந்தைகளும் தமது கருத்துகளை எவ்வித தயக்கமும் இன்றி தெரிவிக்க உரிமை உண்டு. மேலும் வயது, பால், கலாச்சாரம், சாதி, மதம், இயலாமை மற்றும் பிற காரணங்கள் அடிப்படையில் அவர்களின் கருத்துக்களை நிராகரிப்பது, தீர்ப்புக் கூறுவது தவறான செயல்களாகும்)

**கல்வியியல் அணுகுமுறை**

- விளையாட்டு-விளையாட்டின் மூலம் மனித உரிமை சார்ந்த அனுபவத்தை பெறுகின்றனர்.
- குழு விவாதம்- குழு விவாதங்கள் மூலம் விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகும் பார்வை வளர்கிறது.

- உணர்தல்-Feel
- கருத்துக்களை, எண்ணங்களை, அனுபவங்களை வெளிப்படுத்துதல் மற்றும் விளையாட்டில் தனக்கு கிடைத்த உணர்வை பகிர்ந்து கொள்ளல்
- சிந்தித்தல்-Think
- நம்முடைய நடத்தை மற்றும் மனோபாவத்தை வெளிப்படுத்துதல் மற்றும் அவை மனித உரிமை மதிப்பீடுகளுடன் எவ்வாறு தொடர்பு உள்ளது என்பதை அறிதல், தெரிதல்.
- செயல்படுதல்-Act ஆகிய 3 பகுதிகளாக பிரிக்கப்பட்டு குழந்தைகளிடம் விவாதம் கொண்டு செல்லப்படுகிறது.
- நம்முடைய அன்றாட வாழ்க்கையில் மனித உரிமை மதிப்பீடுகளை எவ்வாறு இணைக்கலாம் என்பதையும் எவ்வாறு செயல்படுத்தலாம் என்பதையும் பரிந்துரைக்கும் பகுதியாகும்.

## ஏன் குழு விவாதம் முக்கியம்?

- நேர்மறையான நடத்தைகளை வளர்க்கும்.
- சுய மரியாதையை, தன்னம்பிக்கையை வளர்க்கும்
- பங்கேற்பை அதிகரிக்கும்.

## குழு விவாதத்தை எவ்வாறு நடத்துவது?

- செயல்பாட்டை (நிகழ்ச்சி) தயார் செய்ய வேண்டும். அதற்குரிய பகுதியை முழுமையாக வாசித்து உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.
- செயல்பாடு (நிகழ்ச்சி) முடிந்தவுடன் கலைந்து செல்லாமல். அவர்களை விளையாட்டு தொடர்பான விவாதத்திற்கு தயார் செய்ய வேண்டும்.

- விவாதத்திற்கு தயாரான பின்பு குழந்தைகளிடம் விளையாட்டு தொடர்பான கேள்விகளை கேட்க வேண்டும். கேள்விகள் சுருக்கமாக, எளிதாக இருக்க வேண்டும். ஒரு நேரத்தில் ஒரு கேள்வியை மட்டும் கேட்க வேண்டும்.
- அனைவரும் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டும். யாருக்கும் வாய்ப்பு மறுக்கக் கூடாது.
- அனைவரும் பகிர்ந்து கொண்ட பிறகு நெறியாளர் தனது கருத்துக்களை பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- இறுதியாக குழு விவாதத்தை நிறைவு செய்ய வேண்டும். குழு விவாதம் 10 முதல் 15 நிமிடங்கள் மிகாமல் இருந்தால் சிறப்பாக இருக்கும். தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது. தலைப்பிற்கு பொருந்தாத விவாதங்களை தவிர்த்தல் நல்லது.

## குழந்தை வளர்ச்சி

குழந்தைகள் 6 வயது முதல் 12 வயது வரை வேகமாக வளரும் பருவமாகும்.

- உடல்சார் வளர்ச்சி–Physical development
- அறிவுசார் வளர்ச்சி- Cognitive development
- சமூகம்சார் வளர்ச்சி-Social development

# 08. மனித உரிமை மன்றம் மற்றும் குழுவிற்கான நடத்தை விதிகள் உருவாக்கம்



## நடத்தை விதிகள் என்றால் என்ன?

குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் இணைந்து சிறப்பாக செயல்பட உதவியாக இருக்கும் கருவியே நடத்தை விதிகள். வழிகாட்டல்களை உருவாக்கி குழுவில் இணக்கமான சூழலை ஏற்படுத்த அவசியமாகிறது. நடத்தை விதிகள் அனைத்து உறுப்பினர்களாலும் உருவாக்கப்படுகின்றன. அவை குழுவின் மதிப்பீடுகளை பிரதிபலிப்பதாகவும், மரியாதை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. இவை அனைத்து உறுப்பினர்களாலும் வளர்த்தெடுக்கப் வேண்டியதாகும். நடத்தை விதிகள் நம்முடைய செயல்பாடுகளை ஒழுங்குப்படுத்தவும், நடத்தைகளை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் தவிர்ப்பதற்கான கருவியாகவும் உள்ளது.

## நடத்தை விதிகள் ஏன் முக்கியம்?

**நடத்தை விதிகள்...**

- குழு உணர்வை வலுப்படுத்துகிறது. குழுவில்தான் உள்ளோம் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது.

- தன்னுடைய நடத்தை மற்றும் மனோபாவத்திற்கான பொறுப்பை தானே ஏற்பதை உறுதிச் செய்தல்.
- குழந்தைகள் மற்றும் பொறுப்பாளர்களின் பாதுகாப்பிற்கு பங்களிப்பு செய்தல்.
- குழுவின் செயல்பாடுகள் சுமூகமாக நடைபெற உறுதி செய்தல்
- குழுவில் இணக்கமான மற்றும் பரஸ்பர மரியாதையை ஏற்படுத்துதல்.

## ஏன் அனைவரும் இணைந்து நடத்தை விதிகளை உருவாக்க வேண்டும்?

குழந்தைகள் அனைவரும் இணைந்து நடத்தை விதிகளை உருவாக்கினால்தான் அது தங்களால் உருவாக்கப்பட்டது என்ற என்ற உணர்வை வளர்க்கும். அவர்கள் அதிகமான மதிப்பும் மரியாதையும் அளிப்பார்கள். மேலும் குழந்தைகள் முடிவு எடுக்கும் திறனை பெறுவதோடு அவர்களின் பார்வையில் விதிகளை அமைப்பர். இல்லையெனில் பெரியவர்களின் பார்வையில் நடத்தை விதிகள் குழந்தைகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

## நல்ல நடத்தை விதிகளை எவ்வாறு உருவாக்கலாம்?

- அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் உருவாக்க வேண்டும். அப்போதுதான் அதை அவர்கள் மதித்து நடப்பார்கள்.
- நேர்மறையான மொழியை (சொற்கள், வார்த்தைகள்) பயன்படுத்த வேண்டும்.
- நபர்களை நேரடியாக மையப்படுத்தியதாக இருக்க வேண்டும். மறைமுகமாக சாடுவதாக இருத்தல் கூடாது.
- விதிகள் பொருத்தமானதாகவும் நடைமுறைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும்.

- எளிதாகவும், புரிந்து கொள்ளும் வகையிலும் இருக்க வேண்டும்

## குழந்தைகளுடன் இணைந்து நடத்தை விதிகளை எவ்வாறு ஏற்படுத்துவது?

மாணவர் மன்ற செயல்பாடுகளை தொடங்கும் முன்பு நடத்தை விதிகளை குழந்தைகளைக் கொண்டு ஒவ்வொரு மாணவர் மன்றமும் ஏற்படுத்த வேண்டும்.

- முதலில் குழந்தைகளுக்குள் தோழமை உணர்வை வளர்க்கும் வகையில் செயல்பாடுகளை கொண்டு செல்ல வேண்டும்.
- குழந்தைகள் விவாதிப்பதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும்
- குழந்தைகளிடம் நடத்தை விதிகள் ஒன்றை ஏன் உருவாக்க வேண்டும் என்ற கேள்வியை எழுப்புதல்.
- நல்ல மற்றும் எதிர்மறையான வழிகாட்டல்களை உதாரணங்களாக தருதல்.
- குழந்தைகள் சிறந்த நடத்தை விதிகளை பரிந்துரைக்க ஊக்கப்படுத்துதல்.
- நடத்தை விதிகளை மீளாய்வு செய்தல், அனைவரிடமும் ஒப்புதல் பெறுதல்.
- அனைவராலும் உருவாக்கப்பட்ட நடத்தை விதிகளை சுவரொட்டியாக காட்சிப்படுத்துதல்
- அவ்வப்போது விதிகளை தேவையின் நிமித்தம் மாற்றியமைத்தல்.

## குழந்தைகள் நடத்தை விதிகளை ஏற்று நடந்திட எவ்வாறு உதவி செய்வது?

- முன்மாதிரியாக நடந்து கொள்ளுதல்.
- அவர்களின் வாக்குறுதிகளை அவ்வப்போது நினைவுப்படுத்துதல்.
- பிரச்சனைகளை தீர்க்க குழுவை ஈடுபடுத்துதல்.
- நடத்தை விதிகளை முறையாகவும் நடுநிலையாகவும் பயன்படுத்துதல்.

# மனித உரிமை விளையாட்டுகள்

## 09. எண்கள் வழி ஒதுக்கல்



### நோக்கம்

ஒதுக்குதல் மற்றும் விளிம்பு நிலையை அனுபவம் மூலம் உணர்தல்.

- ஏன் அனைவரையும் உள்ளடக்குவது முக்கியம் என்பதையும்
- குழுவில் அனைவரையும் சேர்ப்பதற்கான வழிகளையும் அறிதல்.

### உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

பாகுபடுத்தாமை மற்றும் சமத்துவ உரிமைகள். அனைவரும் சமமானவர்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கியதாக இருத்தல்.

### செயல்முறைகள்

1. குழு விளையாட்டிற்கான இடத்தில் அனைவரும் ஒரே வட்டமாக நிற்க வேண்டும்.
2. வட்டத்திற்குள் அனைவரும் கலந்து நடக்க வேண்டும்.

3. நடக்கும் போது ஏதாவது ஒரு விலங்கு போன்று நடக்கலாம் உதா. யானை, தவளை, முயல் இன்னும் பிற...)
4. குழுவை நடத்தக் கூடியவர் ஒரு குறிப்பிட்ட எண்ணை சொல்ல வேண்டும். ( பங்கேற்பாளர்கள் எண்ணிக்கையை விட குறைவாக இருக்க வேண்டும்.)
5. குறிப்பிட்ட எண்ணை சொன்னவுடன் (உதா.) 5 என்று சொன்னால் உடனடியாக அனைவரும் 5 நபர்கள் கொண்ட குழுவாக சேர்ந்திருக்க வேண்டும்.
6 அவ்வாறு குழுவில் சேராத குழந்தைகளை குழுவிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

## குழு விவாதம்

விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைத்த அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

### உணர்தல்

- இந்த விளையாட்டு பிடித்திருக்கிறதா?
- தாங்கள் குழுவில் இருந்ததைப் பற்றி எப்படி உணர்கிறீர்கள்?
- குழுவிலிருந்து நீக்கப்பட்ட போது தாங்கள் எப்படி உணர்கிறீர்கள்?

### சிந்தித்தல்

- உங்கள் பள்ளியில், வீட்டில், ஊரில், நண்பர்களால் ஒதுக்கப்பட்ட அனுபவம் உள்ளதா? பகிரவும்
- நம் ஊரில் மற்றும் சில இடங்களில் ஏதாவது ஒரு வகையில் சிலர் ஒதுக்கப்படுவது குறித்து சிந்திக்கவும்.



## செயல்கள்

- நம்முடைய குழுவிலிருந்து எவரும் ஒதுக்கப்படாமல் இருப்பதற்கு நாம் என்ன செய்யலாம்.

## மாற்று முறைகள்

பாடல்களை ஒலிக்க விட்டு சீரான இடைவெளியில் நிறுத்தி எண்களை அறிவித்தும் செய்யலாம்.

# 10.மேகத்திற்குள் விமானம் (நம்பிக்கை ஒளி)



## நோக்கம்

அனுபவங்கள் வாயிலாக பார்வையற்றோர் நிலையிலிருந்து உணர்தல் மற்றும் சிந்தித்தல்.

- மாற்றுத்திறன் படைத்தவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள்
- ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக வளர்வதற்கு எப்படி நாம் உதவிகரமாக இருக்க முடியும்.
- நம் இலக்கை அடைய நாம் எவ்வாறு இணைந்து செயல்படுதல் என்பதை அறிதல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

பாகுபடுத்தாமை மற்றும் சமத்துவ உரிமைகள். மாற்றுத்திறன் குழந்தைகள் சிறப்புக் கல்வி மற்றும் கவனிப்பை பெறுவதற்கான உரிமை உண்டு. மாற்றுத் திறன் உடையவர்களை மதித்தல் மற்றும் சமமாக நடத்துதல். அனைவரும் பாதுகாப்புடன் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துதல்.

## செயல்முறைகள்

1. இந்த விளையாட்டில் ஒருவர் தன்னை மேகத்திற்குள் காணமல் போகும் விமானமாக தன்னுடைய கண்ணை

மூடிக் கொள்ள வேண்டும் அல்லது துணியால் தன் கண்ணை கட்டிக் கொள்ள வேண்டும்.

2. இரண்டு நபர்கள் கொண்ட குழுவாக செயல்படுதல்.
3. குழு விளையாட்டு நடைபெறும் இடத்தை வானமாக நினைத்துக் கொள்ள வேண்டும். ஒரு மீட்டர் தொலைவிலிருந்து மேகக் கூட்டங்கள் அந்த இடத்தை சூழ்ந்து கொண்டது.
4. மேகக் கூட்டத்திற்குள் செல்லும் விமானத்திற்கு வழி தெரியவில்லை. அதனால் மேற்கொண்டு திசை அறிந்து செல்வதற்கு சிரமமாக உள்ளன.
5. ஒருவர் தனது கைகளை விமானத்தின் இறக்கை போன்று நீட்டிக் கொள்ள வேண்டும். அவர் விமானமாக செயல்படுவார். மற்றொருவர் விமானியாக செயல்படுவார். அவர் விமானத்தின் பின்னால் தொடாமல் அருகே செல்வார்.
6 விமானியாக செயல்படுபவர் தனது கைகளை வலது மற்றும் இடது புறம் என தட்டி திசையை காட்டுவார். அவர் ஓசை மூலம் காட்டும் திசையை நோக்கி விமானம் செல்லும், இறுதியாக மேகத்திலிருந்து விடுபடுவர்.
7. மேற்கண்டவாறு குழந்தைகள் மாற்றி மாற்றி விளையாட நெறிப்படுத்த வேண்டும்.

## குழு விவாதம்

விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைத்த அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்

## உணர்தல்

- இந்த விளையாட்டு பிடித்திருக்கிறதா?
- உங்களால் எப்போது பார்க்க முடியவில்லை? பாதுகாப்பு இருந்ததாக உணர்ந்தீர்களா? ஆம், இல்லை
- வழிகாட்டுவது எளிதாக இருந்ததா?

## சிந்தித்தல்

- பாதுகாப்பாக செல்வதற்கு எம்மாதிரியான யுக்திகளை, வழிகளை பயன்படுத்தினீர்கள்?
- மீண்டும் அதே விளையாட்டை விளையாடச் சொன்னால் முன்பைவிட சிறப்பாக செயல்படுவீர்களா?
- பார்வையற்றோர் எவ்வாறு பாதுகாப்பாக உள்ளனர்? பிற வகையான மாற்றுத்திறனாளிகள் நிலையைப் பற்றியும் விவாதிக்கவும்.

## செயல்கள்

- நம்முடைய குழுவில் பார்வையற்றவர்கள் எதிர்கொண்டது போல சமூகத்தில் மாற்றுத்திறன் உள்ளவர்கள் சிறப்பாக செயல்பட நாம் என்ன செய்யலாம்.

## மாற்று முறைகள்

விமானத்திற்கு பதில் இரயில் வண்டி போன்று 3 அல்லது 4 நபர்கள் தொடர்ச்சியாக இரயில் போன்று வரச் சொல்லலாம். முன்னால் செல்பவர் இரயில் எஞ்சின் போன்று செயல்படுவார். குகைக்குள் செல்லும் போது இருட்டாக இருக்கும் அப்போது பின்னால் செல்பவர்கள் கைகளை தட்டி திசையைக் காட்ட வேண்டும். வெற்றிகரமாக குகையை கடக்க செய்தல்.

# 11. ஆக்டோபஸ்



## நோக்கம்

குழுவாக செயல்படுதலை அனுபவப்பூர்வமாக உணர்தல் மற்றும் சிந்தித்தல்

- நம்மிடையே ஒரே மாதிரியானவை மற்றும் வேறுபாடுகளை அறிந்து எவ்வாறு குழுவாக செயல்பட்டு இலக்கை அடைதல் என்பதை பற்றி தெரிந்து கொள்ளுதல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபடுத்தாமை மற்றும் சமத்துவ உரிமைகள். அனைவரும் இவ்வுரிமைகளை அனுபவிக்க நமக்கு தேவையானவை
    - பொதுவான இடத்தில் பிறரை பாராட்டுதல் மற்றும் ஊக்குவித்தல்.
    - பிறரைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
    - ஒருவருக்கொருவர் வேறுபாடுகளை மதித்தல்

## செயல்முறைகள்

1. விளையாடும் இடத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்லும் போது ஆக்டோபஸ்சிடம் மாட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
2. எதிர் எதிர் திசையில் 20 மீட்டர் இடைவெளியில் இரண்டு கோடுகளை வரைய வேண்டும். அக்கோடுகளே எல்லையாக அமையும்.
3. குழந்தைகளை சம எண்ணிக்கையில் பிரித்து எதிர் எதிர் திசையில் நிற்கச் செய்ய வேண்டும்.
4. குழந்தைகளில் ஒருவர் ஆக்டோபஸ்சாக நடுவில் நிற்க வேண்டும்.
5. இப்போது கடக்கலாம் என்று ஆக்டோபஸ் சொல்லும் போது எதிர் எதிர் திசைக்கு செல்ல வேண்டும். அவ்வாறு எதிர் எதிர் திசைக்கு செல்லும் போது ஆக்டோபஸ் பிடிப்பவர்கள் பிறகு அவர்களும் ஆக்டோபஸ்சாக மாறிவிடுவார்கள். இவ்வாறு விளையாட்டு தொடர்ந்து நடக்கும். ஆக்டோபஸ் எண்ணிக்கையும் கூடும்.
6. இறுதியாக அனைவரும் ஆக்டோபஸ்சாக மாறிவிடுவார்கள். அத்துடன் விளையாட்டு முடிவுக்கு வந்து விடும்.

## குழு விவாதம்

- விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைக்க அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்

## உணர்தல்

- இந்த விளையாட்டு பிடித்திருக்கிறதா? ஆம், இல்லை ஏன்? இந்த விளையாட்டில் எளிதான பகுதி எது? கடினமான பகுதி எது? பகிரவும்.
- ஆக்டோபஸ்சாக இருந்ததைப் பற்றி எப்படி உணர்கிறீர்கள்? ஏன் பிடித்திருக்கிறது? மற்றும் ஏன் பிடிக்கவில்லை?
- நீங்கள் குழுவில் இருப்பதைப் பற்றி எப்படி உணர்கிறீர்கள்?

## சிந்தித்தல்


இந்த விளையாட்டின் மூலம் ஒரு குறிப்பிட்ட பெயரிடுதல் மூலம் எலலோரையும் இணைக்க முடிகிறதா? அனைவரையும் எளிதாக அடையாளம் காண இது எளிதாக இருக்குமா?

## செயல்கள்

அனைவரும் குழுவில் ஒரு அங்கத்தினர் என்ற உணர்வை ஏற்படுத்த நாம் அனைவரும் இணைந்து என்ன செய்யலாம்.

# 12. முதலையும் தவளையும்





## நோக்கம்

ஒதுக்குதல் மற்றும் விளிம்பு நிலையை அனுபவம் மூலம் உணர்தல்.

- அனைவரையும் உள்ளடக்குவது மற்றும் ஒதுக்குதலை அனுபவப்பூர்வமாக உணர்தல் மற்றும் அதைப் பற்றி சிந்தித்தல்.
- அனைவரையும் உள்ளடக்க குழு எவ்வாறு செயல்படுவது... அனைவரும் எவ்வாறு ஒன்றுமையான இணைந்து நேர்மறையான இலக்கை அடைவது...

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை, அனைத்து வகையான வன்முறைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை, அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் குறிப்பாக பாதுகாப்பான சூழல்.

## செயல்முறைகள்

1. ஒவ்வொரு குழந்தையும் சிறிய தவளையாக விளையாட வேண்டும். தவளை முதலையிடமிருந்து தப்பிக்க தாமரை அல்லது அல்லி இலைகள் மீது நின்று கொள்வர்.

2. குழு விளையாட்டிற்கான இடத்தில் அனைவரும் ஒரே வட்டமாக நிற்க வேண்டும்.
3. பெரிய செய்தித்தாள்களை குழந்தைகளின் பாதி எண்ணிக்கையில் வட்டத்திற்குள் பரவலாக பரப்ப வேண்டும்.
4. விளையாட்டைப் பற்றி குழந்தைகளுக்கு தெளிவாக விளக்க வேண்டும். இங்கு வட்டம் என்பது குளம் என்று கருதிக் கொள்ள வேண்டும். செய்தித் தாள்கள் தாமரை இலைகள் எனக் கருத வேண்டும்.
5. அனைத்துக் குழந்தைகளும் சிறிய தவளையாக இருப்பர். ஒரே ஒரு முதலை மட்டும் இருக்கும். அனைத்து தவளைகளும் குளத்தில் நீந்தி கொண்டிருக்கும் அப்போது பசியில் உள்ள முதலை தனக்கு பிடித்த சிறிய தவளைகளை பிடித்து உணவாக்க வருகின்றது. அப்போது முதலை வருது தப்பிச்சுடுங்க என்று சத்தமாக கூற வேண்டும். அப்போது அனைத்து தவளைகளும் தாமரை இலைகள் மீது ஏறிக் கொள்வர்.அப்போது முதலையால் தவளையை சாப்பிட முடியாது. பிறர் கையைத்தட்டிய உடன் மீண்டும் நீரில்நீந்தலாம்.
6. இந்த விளையாட்டில் ஒவ்வொரு முறையும் ஒரு செய்தித்தாளை நீக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் தோற்கும் ஒருவர் விளையாட்டில் இருந்து வெளியேறுவார். இறுதியில் ஒருவர் மட்டும் இருப்பார் அவரே வெற்றி பெற்றவராவார்.

## குழு விவாதம்

விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைக்க அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.



## உணர்தல்

இந்த விளையாட்டு பிடித்திருக்கா?

யாராவது ஒருவர்  தாமரை இலை போன்று அறையில் அடைத்திருந்தால் அதை எப்படி உணர்கிறீர்கள்.

தாமரை இலையிலிருந்து தாங்கள் வெளியேற்றப்பட்டால் என்ன செய்வீர்கள்?



## சிந்தித்தல்

இவ்விளையாட்டின் போது பிறருக்கு எவ்வகையில் உதவி செய்தீர்கள்

அனைவரும் குழுவில் சிறப்பாக உள்ளோம் என்ற உணர்வு ஏற்படுத்தியதா? குழு உணர்வு மற்றும் பிறரை ஆபத்திலிருந்து காத்தல்.

குழந்தைகளுக்கு பாதுகாப்பான இடங்கள் எவை என வாதிக்கவும். ஒரு தாளில் ஒவ்வொருவரும் பாதுகாப்பான இடங்கள் எவை என்பதை எழுதி பகிர்ந்து கொள்ள செய்யவும்.



## செயல்கள்

அனைவரும் குழுவில் உள்ளோம் என்ற உணர்வையும் பாதுகாப்பான சூழலையும் எவ்வாறு உருவாக்கலாம்.

# 13. பலூன்



## நோக்கம்

- குழுவாக செயல்படுதல் மற்றும் நம் இலக்கை அடைய எவ்வாறு குழுவாக செயல்படுவது என்பதை அனுபவப்பூர்வமாக உணர்தல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை, அனைத்து வகையான வன்முறைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை, அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் குறிப்பாக பாதுகாப்பான சூழல், அனைவரையும் உள்ளடக்கம் மற்றும் பிறரை மதித்தல்

## செயல்முறைகள்

1. அனைவரின் கைகளிலும் ஒரு காற்று நிரப்பப்பட்ட ஒரு பலூன் இருக்க வேண்டும்.
2. குழு விளையாட்டிற்கான இடத்தில் அனைவரும் ஒரே வட்டமாக நிற்க வேண்டும்.
3. 2 அல்லது 3 குழந்தைகளை குழுவாக சேர்க்க வேண்டும்.

4. 20 மீட்டர் இடைவெளியில் ஒரு திசையிலிருந்து மற்றொரு திசைக்கு பலூனை தட்டிக் கொண்டு செல்ல வேண்டும். பலூன் தலைக்கு மேல் இருக்க வேண்டும்.
5. யாரெல்லாம் எதிர் திசையை கடக்கின்றனரோ அவர்கள் வெற்றி பெற்றவர்கள்.

## குழு விவாதம்

- விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைத்த அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.



## உணர்தல்

- இந்த விளையாட்டு பிடித்திருக்கிறதா? ஆம், இல்லை ஏன்? இந்த விளையாட்டில் எளிதான பகுதி எது? கடினமான பகுதி எது? பகிரவும்



## சிந்தித்தல்

- பலூன் காற்றில் தொடர்ந்து பறக்க எம்மாதிரியான யுக்திகளை, வழிகளை பயன்படுத்தினீர்கள்?
- மீண்டும் அதே விளையாட்டை விளையாடச் சொன்னால் முன்பைவிட சிறப்பாக செயல்படுவீர்களா?



## செயல்கள்

- அனைவரின் ஒத்துழைப்புடன் குழு பயன்பட எவ்வாறு செயல்படலாம்.
- அனைவரும் குழுவில் ஓர் அங்கத்தினர் என்ற உணர்வை ஏற்படுத்த நாம் அனைவரும் இணைந்து என்ன செய்யலாம்.

# 14. புயல் ஓசை...



## நோக்கம்

- சத்தத்தின் மூலமாக ஒன்றிணைவதை அனுபவப்பூர்வமாக உணர்தல்.
- அனைவரும் சேர்ந்து செயல்படுவதன் மூலம் இலக்கை எவ்வாறு அடைவது என்பதை அறிந்து கொள்ள...

  நாம் ஒன்றிணைந்து பிறரையும் நம்முடன் இணைத்துக் கொள்ளல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை, அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பிறரையும் உள்ளடக்குதல்.

## செயல்முறைகள்

குழு விளையாட்டிற்கான இடத்தில் அனைவரும் ஒரே வட்டமாக நிற்க வேண்டும். இது பெரிய குழுவில் விளையாடும் விளையாட்டாகும்.

1. நீங்கள் அனைவரும் ஒரு இசைக் கச்சேரியில் உள்ள கலைஞர்கள் போன்று உணர்ந்து கொள்ள வேண்டும். இக்குழுவிற்கு ஒரு இசையமைப்பாளர் இருப்பார். நம்ம ஊர் இளையராஜா போன்று. அவர் காட்டும் சைகைக்கு ஏற்ப தாங்கள் புயலுக்கான ஓசையை ஏற்படுத்த வேண்டும். அவரின் கை அசைவிற்கு ஏற்ப ஏற்றி இறக்கி ஓசையை ஏற்படுத்துதல் அவசியம்.
2. வட்டத்தில் ஒருவர் இசையமைப்பாளர் போன்று என்ன செய்ய வேண்டும் என்று செய்து காட்டுவார் அதை பங்கேற்பாளர்கள் அப்படியே செய்ய வேண்டும். அதன்படி
    - உங்கள் கைகளை ஒன்றுடன் ஒன்று உரச வேண்டும். (Rub your hands)
    - அனைவரும் கைகளை தட்ட வேண்டும். முதலில் ஒரு விரலில் தட்ட வேண்டும், பிறகு இரண்டு, மூன்று, நான்கு இறுதியாக ஐந்து விரல்களையும் சேர்த்து வேகமாக தட்ட வேண்டும்.
    - கைகளை தட்டியவுடன் உடனடியாக கைகளால் தங்களுடைய இரண்டு தொடைகளிலும் தட்ட வேண்டும்.
    - பிறகு இரண்டு கைகளையும் தட்டி, தொடைகளை தட்டி குதிக்க வேண்டும். இவை அனைத்தும் வேகமாக நிகழ வேண்டும்.
    - இறுதியாக காற்று வீசும் சப்தத்தை அனைவரும் சேர்ந்து உருவாக்க வேண்டும்.
3. இப்போது வட்டத்தில் உள்ளவர்களை 25 நபர்கள் என்று தோராயமாக வைத்துக் கொண்டால் 5 நபர்கள் வீதம் நீங்கள்

குழு என்பதை உணர்த்துவார். வட்டத்தை விட்டு யாரும் செல்லக் கூடாது.

4. இப்போது பொறுப்பாளர் தனது இரண்டு கைகளையும் இடது புறம் கீழிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்துவார். இறுதியாக வலது புறம் உச்சத்தில் சென்று முடியும்.
5. அவ்வாறு கைகளை உயர்த்தும் போது புயல் காற்றின் ஓசை மெதுவாக ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே செல்லும். சீரான அளவில் தனது கைகளை அலைகள் போன்று ஆரம்பிப்பார். அதற்கு ஏற்றது போல் ஓசையை சீராக எழுப்ப வேண்டும்.
6. இறுதியாக முடிக்கும் போது உச்சத்தில் இருந்து படிப்படியாக குறைந்து மிக மெதுவான ஓசையில் வந்து முடிந்து மீண்டும் குதித்தல், தொடைகளில் தட்டுதல், கைகளை தட்டுதல் மற்றும் விரல்களால் தட்டி விளையாட்டை முடிக்க வேண்டும்.

## குழு விவாதம்

விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைக்க அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

## உணர்தல்

இந்த விளையாட்டு பிடித்திருக்கிறதா? ஆம், இல்லை ஏன்? இந்த விளையாட்டில் நீங்களும் ஒரு அங்கமாக உள்ளது பிடித்திருக்கிறதா?

## சிந்தித்தல்

எப்போது புயல் ஓசை நிஜமாகவே இருந்தது?

இந்த விளையாட்டின் ஒரு அங்கத்தினராக ஏன் அனைவரும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

இசையமைப்பாளர் போன்று பொறுப்பாளரின் வழிகாட்டல் ஏன் முக்கியம்?

## செயல்கள்

குழுவில் அனைவரின் ஒத்துழைப்பையும் அதிகரிக்க என்ன செய்யலாம்.

# 15. பூனை



## நோக்கம்

- தோழமை மற்றும் போட்டியுணர்வை அனுபவப்பூர்வமாக உணர்தல்.
- நேர்மறையாக நாம் எவ்வாறு போட்டியிடுவது என்பதை உணர்ந்து கொள்ளுதல்
- ஒருவரையொருவர் பாதுகாக்க நாம் எவ்வாறு உதவி செய்து கொள்ளுதல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை, அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பிறரையும் உள்ளடக்குதல்.

## செயல்முறைகள்

பூனை சுண்டெலியை பிடிக்க வேண்டும். சுண்டெலி பூனையிடமிருந்து தப்பிக்க வேண்டும்.

1. பூனை எலி விளையாட்டில் பூனை எலியைப் பிடிக்க வேண்டும. பிடிபடும் எலி அதனுடன் சேர்ந்து பூனையாக மாறி எலியை பிடிக்கும்.
2. ஒருவர் பூனையாக செயல்படுவார். மற்றவர்கள் அனைவரும் எலிகளாக செயல்படுவர். இந்த விளையாட்டு குறிப்பிட்ட வட்டத்திற்குள்தான் நடக்க வேண்டும். அங்கும் இங்கும் ஓடி பூனையிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.
3. பூனை எலியை பிடிக்க வரும் போது இரண்டு எலிகளாக கை கோர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது பூனை எலியை பிடிக்க முடியாது. பூனை தங்களை கடந்த பின்பு மீண்டும் கைகளை விட்டு வட்டத்திற்குள் அங்கும் இங்கும் செல்ல வேண்டும். குழு தலைவர் இதை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.
4. அனைத்து எலிகளும் பூனையாக மாறியவுடன் விளையாட்டை நிறுத்திக் கொள்ளலாம்.

## உணர்தல்

- இந்த விளையாட்டு பிடித்திருக்கிறதா?
- இந்த விளையாட்டில் பூனையாக இருந்தது பிடித்திருந்ததா? ஏன்?
- இந்த விளையாட்டில் எலியாக இருந்தது பிடித்திருந்ததா? ஏன்?

## சிந்தித்தல்

- எலிகள், பூனையிடமிருந்து தப்பிக்க எம்மாதிரியான யுக்திகளை, வழிகளை பயன்படுத்தின?

- பூனைகள் எலிகளை பிடிக்க எம்மாதிரியான யுக்திகளை, வழிகளை பயன்படுத்தின?
- இந்த விளையாட்டில் எப்போது சரியான போட்டி இருந்தது?
- இந்த விளையாட்டில் எப்போது பிறருடன் ஒத்துழைப்புடன் நடந்து கொண்டீர்கள்.



### செயல்கள்

- ஆரோக்கியமான நல்ல போட்டி என்றால் என்ன? ஆரோக்கியமற்ற போட்டி எப்படி இருக்கும்
- நம்முடைய விளையாட்டுகளில் ஆரோக்கியமாக விளையாட எம்மாதிரியான போட்டி முறைகளை கொண்டு வரலாம்.

### மாற்று முறைகள்

### சிலையாக எலிகள்

குழுவில் ஒரு பூனை மட்டும் இருக்கும். மற்றவை எல்லாம் எலியாக இருக்கும். ஒரு முறை பூனை தொட்டு விட்டால் உடனடியாக எலி சிலையாக மாறி அசைவற்று நிற்கும். அது போன்று அனைத்தையும் சிலையாக மாற்றும். ஏதாவது எலி சிலையாக உள்ள எலியை தொட்டால் மீண்டும் அந்த எலி உயிர் பெற்றுவிடும். இவ்வாறு விளையாட்டு தொடர்ந்து கொண்டே இருக்கும்.

# 16. வரிசையில் போவோம்...வாங்க



## நோக்கம்

- பேசாமல் தொடர்பு கொள்வதை அனுபவப்பூர்வமாக உணர்தல்.
- பேசாமல் தொடர்பு கொள்வதில் உள்ள சிரமங்கள் பற்றி சிந்தித்தல்
- ஒருவருக்கொருவர் உதவி செய்து இலக்கை அடைதல் பற்றி சிந்தித்தல்

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பிறரையும் உள்ளடக்குதல்.

## செயல்முறைகள்

அனைத்துக் குழந்தைகளும் பேசாமல் வரிசையில் நிற்க வேண்டும்.

1. சிறிய அட்டைகள் அல்லது பேப்பரை வெட்டிக் கொள்ள வேண்டும். குழுவில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 1 முதல் இறுதி எண் வரை

(உதாரணத்திற்கு 1-35) ஒவ்வொரு அட்டையிலும் எழுதிக் கொள்ள வேண்டும்.

2. எழுதிய சிறிய அட்டைகள் அனைத்தையும் ஒரு பெட்டியில் கலந்து கொள்ள வேண்டும். தொடர்ச்சியாக எண்கள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. குழந்தைகள் அதிலிருந்து ஆளுக்கொரு அட்டையை எடுக்க வேண்டும். தானும் பார்க்காமல் மற்றவர்களும் பார்க்காமல் அட்டையை எடுத்துக் கொண்டு வரிசைக்கு வர வேண்டும். சரியாக செல்வதை பொறுப்பாளர் கவனிக்க வேண்டும்.
4. வரிசையில் சென்று நின்றபிறகு தனக்குரிய எண் மற்றவர்களுக்கு தெரியும் வகையில் திருப்ப வேண்டும். அதே நேரத்தில் தனது அட்டையை பார்க்கக் கூடாது.
5. இப்பொழுது யாரும் பேசுதல் மற்றும் கை அசைக்கக் கூடாது. கண் ஜாடைகள் மூலமே சரியான எண்கள் வரிசையில் நிற்க வேண்டும்.

## குழு விவாதம்

விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைக்க அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

## உணர்தல்

இந்த விளையாட்டு பிடித்திருக்கிறதா?

இந்த விளையாட்டில் கடினமான பகுதி மற்றும் எளிதான பகுதி எது?

குழுவில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் தங்களுக்கான இடத்தை கண்டுபிடித்து அடைந்தது பற்றி என்ன நினைக்கீறீர்கள்?



## சிந்தித்தல்

சரியான எண்கள் வரிசையில் நிற்க எம்மாதிரியான யுக்திகளை, வழிகளை பயன்படுத்தினீர்கள்?

வார்த்தைகளை பயன்படுத்தாமல் பிறருடன் எவ்வாறு தொடர்பு கொண்டீர்கள்?



## செயல்கள்

நாம் குழுவில் தொடர்பு கொள்வதில் உள்ள தடைகள் என்ன?

நம்முடைய குழுவில் தொடர்பை மேம்படுத்தவும் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் நாம் என்ன செய்யலாம்.

நம்முடைய விளையாட்டுகளில் ஆரோக்கியமான விளையாட எம்மாதிரியான போட்டி முறைகளை கொண்டு வரலாம்.

## மாற்று முறைகள்

எண்களுக்கு பதில் பிறந்த நாள் மற்றும் ஆண்டை பயன்படுத்தலாம். மேலும் பெயரின் முதல் எழுத்தையும் பயன்படுத்தலாம்.

# 17. ஒதுக்கலும் உள்ளடக்கலும்



## நோக்கம்

- ஒதுக்குதலையும் மற்றும் உள்ளடக்குதலையும் அனுபவப்பூர்வமாக உணர்தல்.
- அனைவரையும் உள்ளடக்குதல் பற்றி சிந்தித்தல்
- குழுவில் யாரும் விடுபடாமல் இருப்பதற்கான வழிகளை சிந்தித்தல்

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை, அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பிறரையும் உள்ளடக்குதல்.

## செயல்முறைகள்

### பகுதி-1 உள்ளடக்குதல்

விளையாட்டுக் குழுத்தலைவரின் வழிகாட்டுதலின்படி குழந்தைகள் குழுக்களை ஏற்படுத்த வேண்டும்.

1. இந்த விளையாட்டு பல்வேறு நிலைகளைக் கொண்டது. அதற்காக பல வண்ண கலர் பொட்டுகளை வாங்கிக்

கொள்ள வேண்டும் அல்லது பல்வேறு நிறங்கள் கொண்ட தாள்களை வாங்கி சிறிய அளவில் வெட்டிக் கொள்ள வேண்டும்.

2. இப்பொழுது குழந்தைகளை வட்ட வடிவில் நிற்க சொல்ல வேண்டும். பிறகு அவர்களை வெளிப்புறம் பார்க்கும் வகையில் திரும்பிக் கொள்ள வேண்டும். கண்களையும் மூடிக் கொள்ள வேண்டும்.
3. பொறுப்பாளர் பங்கேற்பாளர்களின் பின்புறம் கழுத்திற்கு கீழ் பொட்டை ஒட்டி விடுவார். யாருக்கு என்ன நிறம் வந்துள்ளது என்று யாருக்கும் தெரியாது. (குழுவிற்கு 5 பேர் அல்லது நாம் விரும்பியபடி)
4. இப்போது குழுவினர் கலந்து ஒரே நிறம் உள்ளவர்கள் ஒரே குழுவாக வர வேண்டும். யாரும் பேசக் கூடாது. பார்வையின் மூலம் அடையாளம் காட்டலாம்.
5. இரண்டாவது முறையாக மீண்டும் எண்ணிக்கையை கூட்டியும் குறைத்தும் விளையாடலாம்

**பகுதி-2 ஒதுக்குதல்**

1. பகுதி 1இல் உள்ள விளையாட்டை மீண்டும் விளையாட வேண்டும். இப்போது இரண்டு குழுவாக பிரிக்கும் வகையில் இரண்டு நிறங்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். பிறகு 2 நபர்களுக்கு ஒரு நிறம் வரும் வகையிலும் ஒரு நபருக்கு ஒரு நிறம் வரும் வகையிலும் வண்ணங்கள் இருக்க வேண்டும்.
2. இப்பொழுது விளையாட்டை ஆரம்பிப்போம். அனைவரும் குழுவில் சென்று சேருவார்கள். இருவர் தனியாகவும் ஒருவர் தனியாகவும் நிற்பர்.

3. நிலைமையை கவனமாக பார்க்க வேண்டும்.

## குழு விவாதம்

- இந்த விளையாட்டு பிடித்துள்ளதா?
- குழுவை கண்டுபிடித்து சேர்ந்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
- குழுவை கண்டுபிடித்து சேரமுடியாத நிலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



## உணர்தல்

- இந்த விளையாட்டு பிடித்திருக்கிறதா?
- இந்த விளையாட்டில் கடினமான பகுதி மற்றும் எளிதான பகுதி எது?
- குழுவில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் தங்களுக்கான இடத்தை கண்டிபிடித்து அடைந்தது பற்றி என்ன நினைக்கீறிர்கள்?



## சிந்தித்தல்

- எங்களுடன் விளையாட வராதே என்று யாராவது உங்களை ஒதுக்கியதுண்டா?
- பள்ளியில், குடும்பத்தில், நண்பர்கள், தெருவில் ஒதுக்கியதுண்டா? ஏன்?
- ஏன் சிலர் ஒதுக்கப்படுகிறார்கள்? விவாதிக்கவும்.



## செயல்கள்

- நம் குழுவில் யாரும் ஒதுக்கப்படாமல் இருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்.
- ஒதுக்கலுக்கு உள்ளாவோர் நிலைக் குறித்து உணர்வோம்

# 18. உலகிலேயே சத்தமான விளையாட்டு



## நோக்கம்

- தொடர்பு கொள்வதில் உள்ள தடைகளை அனுபவப்பூர்வமாக உணர்தல்.
- கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமைப் பற்றி சிந்தித்தல் பிறரின் பேச்சை கவனிப்பது என்பது நமது பொறுப்பு என்பதை உணர்தல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- தனது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை
- அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பிறரையும் உள்ளடக்குதல் மற்றும் பிறர் என்ன சொல்கிறார்கள் என்பதை கவனமுடன் கேட்டல்.

## செயல்முறைகள்

ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு ஒரு தகவலை கொண்டு செல்வர் ஆனால் பல்வேறு தடைகள், இடையூறுகள் இருக்கும்.

1. விளையாடுவதற்கான இடத்தில் ஒரு பகுதியில் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளை தகவலை அனுப்புபவராக இருக்க சொல்ல வேண்டும். குழுவில் உள்ள

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தகவலை அனுப்புபவரின் எண்ணிக்கையை கூட்டலாம்.

2. மேற்கண்டவாறு எண்ணிக்கையில் தகவலை பெறுபவராக அதன் எதிர் திசைக்கு அனுப்ப வேண்டும்.
3. இரண்டு பேருக்குமான இடைவெளி குறிப்பிட தகுந்த அளவில் இருக்க வேண்டும். வேண்டும் என்றால் இரண்டு பிரிவினரும் ஒரு பென்சில் ஏறி நின்றுக் கொள்ளலாம்.
4. மற்றவர்கள் அனைவரும் இரண்டு பேருக்கும் மத்தியில் வந்து நின்றுக் கொள்ள வேண்டும்.
5. இப்பொழுது விளையாட்டு ஆரம்பிக்கப்படும்- ஒரு பகுதியிலிருந்து தகவலை சொல்ல முயற்சி செய்வார். ஆனால் நடுவில் நிற்பவர்கள் சத்தம் போட்டு இடையூறு செய்வார்கள். அந்த சத்தத்தை விட அதிக சத்தத்துடன் தகவல் அனுப்புபவர் சொல்ல வேண்டும். ஆனால் இப்பொழுதும் சத்தம் அதிகரிக்கும்.
6. தகவல் பெறுபவர் 2 நிமிடத்திற்குள் உரிய தகவலைப் பெற்றால் விளையாட்டு முற்றுப்பெறும். இல்லை என்றால் 1 நிமிடத்தில் விளையாட்டு முடிவுக்கு வந்துவிடும்.

## குழு விவாதம்

இந்த விளையாட்டு பிடித்துள்ளதா?

தகவலைப் பெற முடிந்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

## உணர்தல்

இந்த விளையாட்டு மகிழ்ச்சியாக இருந்ததா?

இந்த விளையாட்டில் கடினமான பகுதி மற்றும் எளிதான பகுதி எது?

தகவல் பெறுபவர்கள் சரியான, முழுமையான தகவலை பெற முடியாதது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தகவல் அனுப்புபவர்கள் சரியான தகவலை அனுப்ப முடியாததைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

## சிந்தித்தல்

எல்லோரும் ஒரே நேரத்தில் பேசுதல் மற்றும் யாரும் யாருடைய பேச்சை கேட்காத நிலையை பகிரவும்.

## செயல்கள்

அனைவருக்கும் சரியான தகவல்கள் பெற நாம் என்ன செய்யலாம்.

சத்தம் போடுதல் என்பது ஒரு வகையில் நாம் தொடர்பு கொள்வதில் உள்ள தடையாகும். அது போன்ற தடைகள் பற்றி பகிரவும்.

நாம் சிறந்த முறையில் கவனிக்க என்ன செய்யலாம்.

# 19. ஹாலோ ஹாலோ...




## நோக்கம்

- குழு தொடர்பு பற்றி அனுபவப்பூர்வமாக உணர்தல்.
- சிறப்பான முறையில் தொடர்பு கொள்வது பற்றி சிந்தித்தல்
- ஏன் ஒவ்வொருவருக்கும் குழு தொடர்பு அவசியமாகிறது என்பதைப் பற்றி சிந்தித்தல்

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபாட்டிற்கு எதிரான உரிமை
- தனது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை
- அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பிறரையும் உள்ளடக்குதல் மற்றும் பிறர் என்ன சொல்கிறார்கள் என்பதை கவனமுடன் கேட்டல்.

## செயல்முறைகள்

குழந்தைகள் குழுவில் தகவலை அனுப்புதல். இதில் சில தடைகள் இருக்கலாம்

1. குழந்தைகள் அனைவரும் ஒரே வட்டமாக அமர்ந்து கொள்வார்கள்.

2. ஒரு குழந்தை எனக்கு மாம்பழம் பிடிக்கும். ஆனால் அதை அதிகம் சாப்பிடக் கூடாது என்று தனக்கு அருகில் இடது புறம் உள்ள குழந்தையின் காதில் மெதுவாக சொல்லுவார். ஒரு முறை மட்டுமே சொல்லுவார். இது உதாரணமாகும். பிற சுவையான வாசகங்களையும் தேர்வு செய்து பயன்படுத்தலாம்.
3. சத்தமாக சொல்லக் கூடாது. அருகில் உள்ளவர்களுக்கு கேட்கக் கூடாது.
4. தகவலை கேட்டவர் தனக்கு இடது புறம் உள்ளவர்க்கு அதே போன்று தகவலை பரப்ப வேண்டும்.
5. அப்படியே மாறி மாறி கடைசி குழந்தை வரை வர வேண்டும்.
6. இறுதியாக தகவலை பெற்ற குழந்தை தனக்கு என்ன சொல்லப்பட்டது என்பதை குழுவில் சத்தமாக சொல்ல வேண்டும்.
7. பிறகு முதல் குழந்தை என்ன தகவலை சொல்லி அனுப்பினேன் என்று சொல்ல வேண்டும்.
8. இதே போன்று 2 அல்லது 3 முறை முதல் குழந்தையை மாற்றி விளையாடலாம்.

**குழு விவாதம்**

**உணர்தல்**

- இந்த விளையாட்டு பிடித்துள்ளதா?
- இந்த விளையாட்டில் கடினமான பகுதி எது? எளிமையான பகுதி எது?
- தங்களுக்கு கொடுக்கப்பட்ட தகவலை புரிந்து கொள்ள முடிந்ததா?


## சிந்தித்தல்

- இந்த விளையாட்டு மகிழ்ச்சியாக இருந்ததா?
- இந்த விளையாட்டில் கடினமான பகுதி மற்றும் எளிதான பகுதி எது?
- தகவல் பெறுபவர்கள் சரியான, முழுமையான தகவலை பெற முடியாதது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
- தகவல் அனுப்புபவர்கள் சரியான தகவலை அனுப்ப முடியாததைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

## செயல்கள்

- ஒரே தகவலை சரியான முறையில் பகிர முடியாமைக்கு உள்ள தடைகள் அல்லது இடர்பாடுகள் குறித்து பகிரவும்
- மீண்டும் விளையாடச் சொன்னால் விரைவாகவும் எளிதாகவும் விளையாட எம்மாதிரியான யுக்திகளை கையாள்வீர்கள்

# 20. அணிலும் நரியும்



## நோக்கம்

- வன்முறைக்கு இலக்காகும் விளிம்பு நிலை மற்றும் பொறுப்புகளை அனுபவப்பூர்வமாக உணர்தல்
- வன்முறைக்கு இலக்காகி உள்ளனர் என்பதை அடையாளம் காண...
- உதவித் தேவைப்படுவோருக்கு எவ்வாறு உதவி செய்யலாம் என்று சிந்தித்தல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாதுகாப்பு பெறும் உரிமை
- அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் பாதுகாப்பு பெறும் உரிமை
- அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துதல்

## செயல்முறைகள்

அனைத்துக் குழந்தைகளும் ஆபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதோடு பிறரையும் பாதுகாத்தல்.

1. உதாரணத்திற்கு 25 குழந்தைகள் இருந்தால் 21 குழந்தைகளை 3 நபர்கள் கொண்ட குழுவாக பிரித்துக் கொள்ள வேண்டும்.
2. அதில் இரண்டு குழந்தைகள் மரமாக செயல்பட வேண்டும். ஒருவருக்கு ஒருவர் முகம் பார்த்துக் கொள்ளும் வகையில் நிற்க வேண்டும். இருவரும் மற்றவர்கள் தோளில் கைகயை போட்டுக் கொள்ள வேண்டும். நடுவில் உள்ள இடத்தில் 3வது குழந்தை அணிலாக செயல்படுவார்.
3. இரண்டு நபர்களுக்கு மத்தியில் மரத்தில் உள்ளபோது அணில் பாதுகாப்பாக இருக்கும். மரத்தில் இருந்து வெளியே வந்தால் பாதுகாப்பு கேள்விக்குறியாக இருக்கும்.
4. அதே நேரத்தில் அணில் தனது உணவு, மற்றும் பிற தேவைகளுக்காக மரத்தை விட்டு வெளியே வந்தாக வேண்டும்.
5. அணில்கள் ஒரு மரத்தை விட்டு மற்றொரு மரத்திற்கு தாவுவார்கள்.
6. இப்பொழுது நெறியாளர் அணில்கள் மரத்தை விட்டு வரலாம் என்று சொல்லும் போது வெளியில் வரலாம்.
7. 25 குழந்தைகளில் 4 பேர் மீதம் இருப்பார்கள் அவர்கள் நரிகளாக செயல்படுவார்கள். அணில்கள் மரத்தை விட்டு வெளியே வந்தால் பிடித்துக் கொள்வார்கள்
8. நரி அணிலை பிடித்து விட்டால் நரி அணிலாக மாறிவிடும் அதே நேரத்தில் அணிலும் நரியாக மாறி தொடர்ந்து விளையாடுவார்கள்.

## குழு விவாதம்

விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைக்க அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

### உணர்தல்

இந்த விளையாட்டு பிடித்துள்ளதா?

இந்த விளையாட்டில் மரங்கள் அணிலை பாதுகாத்ததை விரும்புகிறீர்களா?

நீங்கள் அணிலாக செயல்பட்டதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

### சிந்தித்தல்

உங்களுக்கு பாதுகாப்பான இடங்கள் எவை? அவைகளை வரிசைப்படுத்தவும்

உனக்கு யாராவது உதவி செய்துள்ளார்களா? உன்னை நல்லப்படியாக பார்த்து கொண்டதுண்டா? உதாரணங்கள் தரவும்.

நீங்கள் பிறருக்கு உதவி செய்த சம்பவங்கள் இருந்தால் பகிர்ந்து கொள்ளவும்.

### செயல்கள்

உங்கள் குழுவில் உள்ள உறுப்பினர் பாதுகாப்பாக இல்லை என்றால் என்ன செய்வீர்கள்?

# 21. கதை சொல்ல வாரோம்ங்க...



## நோக்கம்

- குழுவாக செயல்படுவதை அனுபவப்பூர்வமாக உணர்தல்
- குழுவாக செயல்பட்டு எவ்வாறு நமது இலக்கை அடைதல் என்பதை தெரிந்து கொள்ள...
- அனைவரும் தோழமையுடன் செயல்படுவதன் மூலம் ஒவ்வொருவரும் எவ்வாறு வெற்றி பெறலாம் என்று சிந்தித்தல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபாட்டிற்கு எதிரான உரிமைகள்
- அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துதல்

## செயல்முறைகள்

அனைத்துக் குழந்தைகளும் இணைந்து ஜாலியான ஒரு கதையை எழுத வேண்டும்.

1. குழந்தைகள் அனைவரும் ஒரே வட்டமாக அமர வேண்டும்.

2. நீண்ட வெள்ளைத்தாளை ஒரு குழந்தையிடம் கொடுத்து இரண்டு வரியில் ஒரு கதையை எழுதச் சொல்ல வேண்டும். அந்தக் குழந்தை எழுதிய பின்பு முதல் வரியை மறைத்து இரண்டாவது வரி மட்டும் தெரியுமாறு அடுத்தவருக்கு கொடுக்க வேண்டும்.
3. அடுத்தவர் அந்த வரியிலிருந்து தனது கதையை இரண்டு வரி எழுதி அதே போன்று தான் எழுதிய இரண்டு வரியில் முதல் வரியை மறைத்து அடுத்தவருக்கு தருவார்.
4. மேற்கண்டவாறு ஒவ்வொருவராக கதை எழுதுவர்.
5. இறுதியாக ஒவ்வொருவராக கதையை படிப்பர். அக்கதையின் போக்கு ................................என்னவாக இருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள்.

### குழு விவாதம்

- விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைத்த அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

### உணர்தல்

- இந்த விளையாட்டு பிடித்துள்ளதா?
- இந்த விளையாட்டில் கடினமான பகுதி எது? எளிமையான பகுதி எது?

### சிந்தித்தல்

- கதையை மேற்கொண்டு எழுதும் போது எவ்வகையான மனநிலை இருந்தது.
- மற்றவர்களுடன் இணைந்து செயல்படுவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

- பிறருடன் இணைந்து செயல்படுவதில் உள்ள தடைகள் என்ன? வரிசைப்படுத்தவும்.



## செயல்கள்

- நமது குழுவில் ஒத்துழைப்பை அதிகரிக்க என்ன செய்யலாம்?
- நாம் இணைந்து செயல்பட தடையாக உள்ளவைகளை திறமையாக எதிர்த்து செயல்பட நாம் என்ன செய்யலாம்?

# 22. மனித முடிச்சுகள்



## நோக்கம்

- குழுவாக செயல்படுவதை அனுபவப்பூர்வமாக உணர்தல் குழுவாக செயல்பட்டு எவ்வாறு நமது இலக்கை அடைதல் என்பதை தெரிந்து கொள்ள...
- அனைவரும் தோழமையுடன் செயல்படுவதன் மூலம் ஒவ்வொருவரும் எவ்வாறு வெற்றி பெறலாம் என்று சிந்தித்தல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபாட்டிற்கு எதிரான உரிமைகள்
- அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துதல்

## செயல்முறைகள்

அனைத்துக் குழந்தைகளும் இணைந்து ஜாலியாக கைகளால் முடிச்சுகளை உருவாக்குவார்கள்.

1. குழந்தைகள் அனைவரும் ஒரே வட்டமாக நிற்க வேண்டும்.
2. அனைவரும் கண்களை மூடி தமது கைகளை முன்பக்கமாக நீட்டிக் கொள்ள வேண்டும்.

3. இப்பொழுது கைகளை நீட்டியவாறு வட்டத்தின் மையத்தை நோக்கி செல்வார்கள்.
4. தங்கள் கைகளுக்கு கிடைக்கும் முதல் கைகளை தனித்தனி கைகளால் பிடித்துக் கொள்வார்கள்.
5. அனைவரும் பிடித்துக் கொண்ட பிறகு கண்களை திறக்கச் சொல்லலாம்.
6 கண்களை திறந்த பின்பு மீண்டும் வட்டத்திற்கு செல்லலாம்
7. நெறியாளர் யாரும் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
8. பத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தால் இரண்டு குழுவாக பிரித்து விளையாடச் சொல்லலாம்.

## குழு விவாதம்

விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைத்த அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

### உணர்தல்

இந்த விளையாட்டு ஜாலியாக இருந்ததா?

இந்த விளையாட்டில் மறக்க முடியாத பகுதி எது?

### சிந்தித்தல்


சிறப்பான முறையில் மனித முடிச்சுகளை ஏற்படுத்த எம்மாதிரியான யுக்திகளை, வழிகளை பயன்படுத்தினீர்கள்?

### செயல்கள்

குழு ஒற்றுமைக்கு மிக முக்கிய காரணங்கள் யாவை? ஏன்?

நம் குழு சிறப்பாக செயல்பட இன்னும் எவ்வகையான தேவைகள் உள்ளன?

# 23. டாம் & ஜெரி (எலி பூனை விளையாட்டு)



## நோக்கம்

- குழுவாக செயல்படுவதை அனுபவப்பூர்வமாக உணர்தல்
- குழுவாக செயல்படுவது பற்றி அறிந்து கொள்ளுதல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபாட்டிற்கு எதிரான உரிமைகள்
- அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துதல்.

## செயல்முறைகள்

1. குழந்தைகள் அனைவரும் வட்டமாக அமர வேண்டும். முதலில் ஒரு பந்தை கொடுக்க வேண்டும். அதற்கு பெயர் **ஜெரி**. இரண்டாவது ஒரு பந்தை கொடுக்க வேண்டும் அதற்கு பெயர் **டாம்**. இப்போது முதல் பந்தை வட்டத்தில் கொடுக்க வேண்டும். ஒரே திசையில் ஒருவர் கையிலிருந்து மற்றொருவருக்கு மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். பிறகு இரண்டாவது பந்தையும் வட்டத்திற்குள் அனுப்ப வேண்டும். ஜெரியை டாம் எட்டிப் பிடிக்க வேண்டும்.

இரண்டு பந்தும் வேகமாக கைகள் மாற வேண்டும். அதையும் கடந்து முதல் பந்தை இரண்டாவது பந்து எட்டி பிடித்துவிட்டால் ஜெரி மாட்டிக் கொண்டது என்று அர்த்தம். இப்போது எதிர் திசையில் பந்து பயணிக்கும். இப்போது இரண்டாவது பந்து முதல் பந்திற்கான வேலையை செய்யும். இவ்வாறு தொடர்ந்து விளையாட்டு நடைபெறும்.

## குழு விவாதம்

- விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைத்த அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

## உணர்தல்

- இந்த விளையாட்டு ஜாலியாக இருந்ததா?
- இந்த விளையாட்டில் மறக்க முடியாத பகுதி எது?

## சிந்தித்தல்

- சிறப்பாக விளையாட எம்மாதிரியான யுக்திகளை, வழிகளை பயன்படுத்தினீர்கள்?

## செயல்கள்

- நம் குழு சிறப்பாக செயல்பட இன்னும் என்ன செய்யலாம்?

# 24. கொஞ்சம் சிரிங்க குழந்தைகளே...



## நோக்கம்

- பிறர் நிலையை அனுபவப்பூர்வமாக உணர்தல்
- உணர்வுகளை ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு கடத்தும் திறனை அறிந்து கொள்ளுதல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபாட்டிற்கு எதிரான உரிமைகள்
- அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துதல்

## செயல்முறைகள்

1. குழந்தைகள் அனைவரையும் வட்டமாக அமர சொல்லவும். முதல் குழந்தை தனக்கு இடது புறம் உள்ள குழந்தையை நோக்கி பிரகாசமாக சிரிப்பார். அந்த குழந்தை தனக்கு இடதுபுறம் உள்ள குழந்தைக்கு அதே அளவில் பிரகாசமான சிரிப்பை கடத்துவார். அவ்வாறு கடைசி குழந்தை வரை சிரிப்பை கடத்துவார்கள்.
2. மேற்கண்ட சிரிப்பு போன்று ஆச்சர்யம், பயம், கோபம், பெருமை போன்ற குணங்களையும் செய்து காட்டலாம்.

## குழு விவாதம்

- விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைக்க அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

## உணர்தல்

- இந்த விளையாட்டு பிடித்திருந்ததா?
- உங்களை பார்த்து ஒருவர் சிரிக்கும் போதும் நீங்கள் மற்றொருவரை பார்த்து சிரிக்கும் போது எப்படி உணர்ந்தீர்கள்?

## சிந்தித்தல்

- மற்றவர்கள் இந்த விளையாட்டு பற்றி என்ன சொன்னார்கள்?

## செயல்கள்

- அனைவரும் நல்லவையாகவே சிந்திக்க நாம் என்ன செய்யலாம்?

# 25. உள்ளே வெளியே...



## நோக்கம்

நம்முடைய மனதும் செயலும் ஒருமித்த நிலையில் உள்ளதா என்பதை அனுபவப்பூர்வமாக உணர்தல்.

## செயல்முறைகள்

1. குழந்தைகள் அனைவரையும் வட்டமாக நிற்க சொல்ல வேண்டும். வட்டமாக நிற்கும் இடம் ஏரிக் கரையாக இருக்கும். வட்டத்தின் உட்பகுதி ஏரியின் உட்பகுதியாகும்.
2. ஏரி என்றால் காலை முன்பக்கம் வைத்து குதிக்க வேண்டும். அதுவே கரை என்றால் மீண்டும் பின்னால் காலை தூக்கி வைக்க வேண்டும்.
3. இப்போது ஏரி மற்றும் கரை என்று வேகமாக சொல்ல வேண்டும். சில நேரங்களில் மாற்றி மாற்றி சொல்ல வேண்டும். உதாரணத்திற்கு ஏரி, கரை, கரை ஏரி, ஏரி என்று சொல்லலாம்.
4. ஏரிக்கு பதில் குளத்தையும் பயன்படுத்தலாம்.

## குழு விவாதம்

### உணர்தல்

இந்த விளையாட்டு பிடித்திருந்ததா?

### சிந்தித்தல்

இந்த விளையாட்டு பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

### செயல்கள்

இது போன்ற விளையாட்டுகளை நாம் நம் குழுவில் தொடர்ந்து விளையாட என்ன செய்யலாம்?

## 26. புயல் வருது ஓடிப் போங்க...



### நோக்கம்

நம்முடைய மனதும் செயலும் ஒருமித்த நிலையில் உள்ளதா என்பதை அனுபவப்பூர்வமாக உணர்தல்

### செயல்முறைகள்

1. குழந்தைகள் அனைவரையும் வட்டமாக நிற்க சொல்ல வேண்டும். ஒரு குழந்தை மட்டும் வட்டத்தின் மையப்பகுதிக்கு சென்று விளையாட்டை ஆரம்பிக்க வேண்டும்.
2. புயல் விளையாட்டை இவ்வாறு ஆரம்பிக்க வேண்டும்- புயல் பக்கத்து ஊர் பக்கமாக வந்துட்டு இருக்கு, நம்ம ஊர் கிட்ட வந்துடுச்சு, கோயிலை சுத்தி வந்துடுச்சி, நம்ம பள்ளிக் கூடம் கடந்து வந்துடுச்சி,..........................இப்ப நம்மகிட்ட வருது அதனால் கருப்பு துணி போட்டவங்க எல்லாம் இடம் மாறுங்கள் என்று சொல்லும் போது கருப்பு துணி உடுத்தியவர்கள் மட்டும் இடம் மாறுவார்கள். மற்றவர்கள் இடம்மாறக் கூடாது. அப்போது நடுவில் இருந்தவர்

கிடைக்கும் ஏதாவது ஒரு இடத்தை பிடித்து நின்றுக் கொள்வார். அப்போது யாருக்காவது ஒருத்தருக்கு இடம் இல்லாமல் போகலாம்

3. இடம் இல்லாமல் மாட்டிக் கொண்டவர் இப்போது நடுவில் நின்று முன்பு சொன்னது போல் சிரிப்பு வரவழைக்கும் வகையில் சொல்லி இடம் மாற சொல்ல வேண்டும். இது போன்று 5 முதல் 7 முறை வரை செய்யலாம்.

## குழு விவாதம்

### உணர்தல்

இந்த விளையாட்டு பிடித்திருந்ததா?

### சிந்தித்தல்

இந்த விளையாட்டு பற்றி நீங்க என்ன நினைக்கிறீர்கள?

### செயல்கள்

இது போன்ற விளையாட்டை நம் குழுவில் தொடர்ந்து விளையாட என்ன செய்யலாம்?

# 27. திசை தேடும் பறவைகள்



## நோக்கம்

- ஒரே மாதிரியான மற்றும் வேறுபாடுகளை அனுபவப்பூர்வமாக உணர்தல்.
- நாம் எவ்வாறு பொதுவில் பகிர்ந்து கொள்ளுதல் பற்றி சிந்தித்தல்
- நாம் அனைவரும் எவ்வகையில் ஒத்த கருத்துடையவராகவும் வேறுபாடுகள் உள்ளவர்களாகவும் உள்ளோம் என்பதை அறிந்து கொள்ளுதல்.

## உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

- பாகுபாட்டிற்கு எதிரான உரிமை
- தனது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை
- பிறரின் வேறுபாடுகளை மதித்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல்.
- பிறரிடமிருந்து நல்ல அம்சங்களை கற்றுக் கொள்ளுதல்
- அனைவரும் அனைத்து வகையான உரிமைகளையும் அனுபவித்தல் மற்றும் பிறரையும் உள்ளடக்குதல் மற்றும் பிறர் என்ன சொல்கிறார்கள் என்பதை கவனமுடன் கேட்டல்.

## செயல்முறைகள்

ஒவ்வொரு குழந்தையும் தனக்கான குழுவை தெரிவுச் செய்து வரையறுக்கப்பட்டுள்ள இடத்தை அடைதல்.

1. 20 மீட்டர் இடைவெளியில் இரண்டு கோள்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். அவற்றில் ஒரு கோளின் பெயர் பூமி என்றும் மற்றொரு கோளின் பெயர் செவ்வாய் என்றும் பெயர் வைத்துக் கொள்ளலாம்.
2. இப்போது விளையாட்டை பொறுப்பாளர் தெளிவாக விளக்குவார். அதன்படி நீல நிற உடை அணிந்தவர்கள் பூமிக்கும் பிற உடைகளை அணிந்தவர்கள் செவ்வாய்க்கும் செல்லலாம் என்று சொன்னவுடன் குழந்தைகள் அவர்களுக்கான திசைக்கு செல்ல வேண்டும்.
3. மேலே சொன்னது போல பல வகையான முறைகளில் தொடர்ந்து விளையாட்டு தொடரும்.

   உதாரணத்திற்கு...

   - சிறுமிகள்-சிறுவர்கள்
   - தங்கச்சி பாப்பா-தம்பி பாப்பா
   - கால்பந்து விளையாட்டு பிடித்தது-கிரிக்கெட் பிடித்தது
   - நேற்று டிவி பார்த்தவர்கள்-டிவி பார்க்காதவர்கள்
   - நேற்று நல்லா தூங்கியவர்கள்-நல்லா தூங்காதவர்கள் என நமக்கு தெரிந்தவைகளை கொண்டு விளையாட்டை ............................... தொடரலாம்.

## குழு விவாதம்

- விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைக்க அனுபவங்களை

கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

### உணர்தல்

- இந்த விளையாட்டு மகிழ்ச்சியாக இருந்ததா?
- நீங்கள் மட்டும் தனியா உங்கள் கோளில் இருந்தீர்களா? அப்போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?
- உங்கள் கோளில் அதிகமான நபர்களுடன் நீங்களும் அங்கமாக இருக்கும் போது என்ன நினைத்தீர்கள்? ஏன்?

### சிந்தித்தல்

- எந்த குழுவிற்கு செல்வது என்று குழப்பம் இருந்ததா? அவ்போது எவ்வாறு முடிவு எடுத்தீர்கள்?
- ஒரு கோளை விட மற்றொரு கோள் சிறப்பாக உள்ளதாகத் தோன்றியதா?
- எவ்வகையில் நாம் பிறருடன் ஒத்துப் போகிறோம். எவ்வகையில் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு நிற்கின்றோம். பகிரவும்.
- உங்களிடமிருந்து வேறுபட்டு இருந்தாலும் உங்கள் நண்பர்களை விரும்ப காரணம் என்ன? ஏன்?

### செயல்கள்

- குழுவில் ஒருத்தரை ஒருவர் சரியாக புரிந்து கொள்ள நாம் குழுவில் என்ன செய்யலாம்.
- அனைவரையும் குழுவில் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை உருவாக்க நாம் என்ன செய்யலாம்.

## 28. டிங் டாங்... இப்ப நேரம் என்ன...



### நோக்கம்

குழுவாக செயல்படுவதை அனுபவப்பூர்வமாக உணர்தல்

ஒவ்வொருவரும் பல்வேறு பட்ட நேரங்கள் மற்றும் தேவைகளை அறிந்து கொள்ளுதல்.

உலகம் முழுவதும் குழந்தைகளுக்கான தேவைகள் வேறுபடுகின்றன என்பதை அறிந்து கொள்ளுதல்.

### உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

பாகுபாட்டிற்கு எதிரான உரிமைகள்

தாய் மொழி மற்றும் தான் சார்ந்த கலாச்சாரத்தின் படி வாழ்வதற்கான உரிமை

தன்னுடைய உரிமைகளை அறிந்து கொள்வதற்கான உரிமை

### செயல்முறைகள்

#### பகுதி-01

1. அனைவரும் குழுவாக கடிகாரம் போன்று செயல்பட வேண்டும்.

2. முதலில் ஒரு வட்டத்தை ஏற்படுத்த வேண்டும். அதில் நான்கு திசைகளிலும் நான்கு கூம்புகள் அல்லது குச்சிகளை நட வேண்டும். நான்கு திசைகளும் முறையே 12, 03, 06, 09 எண்களை பிரதிபலிக்கும்
3. கடிகாரத்தின் இரண்டு முட்களான மணியை காட்டுவதாக ஒன்றும் நிமிடத்தை காட்டுவதாக ஒன்றும் இருக்கும்.
4. இப்போது குழந்தைகள் இரண்டு குழுவாக பிரிந்து மணியை காட்டுவதற்கு ஒரு குழுவும் நிமிடத்தை காட்டுவதற்கு ஒரு குழுவும் இயங்குவார்கள் இவ்விரண்டு குழுவையும் நடுவில் ஒருவர் இணைப்பார்.

**பகுதி-02**

1. இப்போது விளையாட்டு ஆரம்பிக்கும் அதாவது மணி 06.45 என்றால் மணிக்கான குழு 6 இல் நிற்கு நிமிடத்திற்கான குழு 9 இல் நிற்கும். இது போன்று பல்வேறு நேரத்தை மாற்றி விளையாட சொல்லலாம்.
2. மேலும் சில உதாரணங்கள்-நிகழ்ச்சிகளை சொல்லும் போது அது எந்த நேரத்தை குறிப்பிடுகின்றது என்பதை அறிந்து அதற்கு ஏற்ப கடிகாரத்தில் நிற்க வேண்டும்.
    - காலை உணவிற்கான நேரம்
    - குளிக்கும் நேரம்
    - பள்ளிக்கு செல்லும் நேரம்
    - மதிய உணவு நேரம்
    - 6வது பாடவேளை நேரம்
    - டிவி பார்க்கும் நேரம்
    - விளையாடும் நேரம்
    - தூங்கும் நேரம்

## குழு விவாதம்

- விளையாட்டு முடிந்தவுடன் மாணவர்களை ஒன்றாக அமர வைத்து விளையாட்டின் மூலம் கிடைத்த அனுபவங்களை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள கேட்டுக் கொள்ள வேண்டும்.

## உணர்தல்

- இந்த விளையாட்டு பிடித்திருந்ததா?
- இந்த விளையாட்டின் கடினமான பகுதி மற்றும் எளிதான பகுதி எது?

## சிந்தித்தல்

- உங்களுடைய நாளை எவ்வாறு செலவிடுகின்றீர்கள்? பகிர்ந்து கொள்ளவும்.
- நீங்கள் தினந்தோறும் செய்யும் பணிகள் போன்று பிறரும் பணிகளை மேற்கொள்கிறார்களா? அதில் ஏதேனும் வேறுபாடுகள் உள்ளதா?
- அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்கு செல்வதற்கான உரிமை உள்ளது. ஆனால் எல்லோராலும் செல்ல முடியவில்லை ஏன்? விவாதிக்கவும்.

## செயல்கள்

- நம்முடைய தினசரி வாழ்க்கையை சிறப்பான நாளாக்க என்ன செய்யலாம்? என்ன செய்யக் கூடாது?
- குழந்தைகளின் உரிமைகள் மதிக்கப்பட நாம் என்ன செய்யலாம்?